சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

111. ஒரு சத்தியாக்கிரகப் பேருரை

கும்பகர்ணன் சொன்ன புத்திமதி ராவணனால் ஒப்புக்கொள்ளப்பட வில்லை; ஆனால் அது விபீஷணனுக்கு விசேஷ நம்பிக்கை அளித்து விட்டது.

'அறியாத' அறிஞன்

தன் மீதுள்ள பாசத்தால் மந்திராலோசனை மன்றத்தில் தான் பேசியதைக் கும்பகர்ணன் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தான் என்பதையும், அதே சிந்தனையுடன் உறங்கி விழித்தெழுந்து தன்னுடைய தர்ம விரதத்திற்கு இணங்க ராவணனுக்குப் புத்தி சொன்னான் என்பதையும், அதனால் கும்பகர்ண குணாதிசயம் புரட்சிகரமாக மாறிப் போய்விட வில்லையென்பதையும் விபீஷணன் தெரிந்து கொள்ள வில்லை.

போர்க் களத்திலே முகமுகமாய்ச் சந்தித்த இச் சமயம் கும்பகர்ணன் பேசியதையும் விபீஷணன் சரியாகப் 'புரிந்து' கொண்டானில்லை யென்றுதான் சொல்ல வேண்டும். விபீஷணனுடைய அறிவுத் தெளிவையும் லட்சிய உயர்வையும் பெரிதும் போற்றிய போதிலும், கும்பகர்ணன் அந்த லட்சியமாவது, தர்மமாவது தனக்குத் தேவையென்று கருதவேயில்லை.

கண்டதும் களித்தான். அந்தக் களிப்பை ஒட்டியே பெருங் கவலையும் துயரமும் அடைந்தான். 'அமுது உண்ணும் நீ நஞ்சுண்ண வந்தாயோ?' என்றான். சகோதர பாசத்தால் விபீஷண லட்சியத்தைக் கௌரவித்துப் பேசிய வார்த்தைதான் அது.

ராட்சஸப் பிறப்பு என்னும் புன்மை தீர்ந்து விசேஷ நன்மை பெற்றான் விபீஷணன் என்பதையும் ஒப்புக் கொண்டான் கும்பகர்ணன். ராம லட்சுமணரை 'அறப் பெருந் துணைவர்' என்றும் குறிப்பிட்டான். ராமனை 'யார்க்கும் இறையவன்' (யாவர்க்கும் தலைவன்) என்று கூடச் சொல்லி விட்டான். விபீஷணனை மயக்கி மேலும் நம்பிக்கை ஊட்டிய வார்த்தைகள்; விபீஷண பாசத்திலே கலந்து குலாவும் பேச்சு.

'காலன் வாயில் இருந்து கொண்டே களிக்கின்றோம் நாங்கள்!' என்று சொன்னான். 'தோற்ற கட்சி' என்றும் பேசி விட்டான். மேலும் தீர்க்க தரிசனமாக, 'இந்த இலங்கை மூதூருக்கு, இப்புலையெல்லாம் மாண்ட பின்பு சீதாராமனோடும் நீ வருவாய் — இலங்கை அரசுச் செல்வத்தை அனுபவிப்பதற்கு' என்றும் சொல்லித் தீர்த்து விட்டான். இந்த நிலையில், கும்பகர்ணனை நெறிப்படுத்துவது எளிது என்று கூட விபீஷணன் நம்பி விட்டதாகக் கருதலாம்.

பக்த விபீஷணன்

தன் மீதுள்ள காதலால் ராமனது தெய்வத் தன்மையையும் ஒப்புக் கொண்டதுபோல் பேசிவிட்ட அண்ணனை முழுதும் தம்பி நம்பிவிடுகிறான். பக்திக்கும், நம்பிக்கைக்கும் நெருங்கிய உறவுதானே!

விபீஷணன் சொல்லுகிறான்:

இருளுறு சிந்தை
யேற்கும் இன்னருள்
சுரந்த வீரன்,
அருளும்நீ சேரின்.

[இருள்உறு சிந்தையேற்கும் — இருள் நிரம்பிய சிந்தையை உடைய எனக்கும். அருளும் நீ சேரின் — நீ வந்து சேர்ந்தாலும் அருள் புரிவான்.]

'அந்தச் செல்வத்தை உனக்கே தருவேன்' என்கிறான் தம்பி.

முக்தி தருவது மட்டுமா பக்தி! 'காமம் யாவையும் தருவதும் பக்தி' என்பர். 'சீரிய நற்காமம்' என்று பக்தியைக் குறிப்பிடுவதுண்டு.

சகோதர விபீஷணன்

அப்படி லங்காராஜ்யத்தைக் கும்பகர்ணனுக்குக் கொடுத்துவிட்டுஇந்த விபீஷணன் எந்த ராஜ்யத்தைத் தான் ஆளப் போகிறானே! இதோ கேளுங்கள், இவனே சொல்வதை :



'இருளறு சிந்தையேன்' என்று விபீஷணன் தன்னைக் குறிப்பிடுகிறான், பக்தர்களுக்கே உரிய பெரும்பணிவுடன்.

பொய்யனேன் வந்து
நின்றேன்; பொய்யனேன்,
பொய்ய னேனே!

என்று ஆழ்வார் தம்மைக் குறிப்பிடுவது போல.

மகாத்மாக்களே அற்பக் குறைகளையும், தாம் ஏற்றுக் கொண்ட பிறர் குறைகளையும் கூடத் தமது பெருங் குறைகளாகப் பேசுவர்!

பக்த பாஷையில் பீடிகை போட்டுக் கொண்டபின் விபீஷணன் அந்த உச்சநிலைப் பீடத்திலிருந்து இறங்கி வந்து அண்ணனை நோக்குகிறான்.

'இலங்கையின் அரசுச் செல்வம் துய்க்க விரைவில் வருவதற்காக இப்போது திரும்பிப்போ' என்றானல்லவா அண்ணன்!

எனக்கவன் தந்த
செல்வத்(து) இலங்கையும்
அரசும் எல்லாம்
நினக்குநான் தருவன்;
தந்(து), உன் ஏவலின்
எளிதில் நிற்பன்!

லங்கேச்வர பட்டமோ பதவியோ வேண்டாம்; திருந்திய அண்ணனுக்கு ஏவலாளனாகப் பொருந்தியிருப்பதே போதும் என்கிறான். ஆனால் இந்த அண்ணன் திருந்த வேண்டுமே!

உத்தம சகோதரன் ஓர் எச்சரிக்கையும் செய்து பார்க்கிறான் :

போதலோ அரிது;
போனால் புகலிடம்
இல்லை; வல்லே
சாதலோ சரதம்!

[வல்லே – விரைவாக. சரதம் – திண்ணம்.]

ஒழுக்கமே முக்கியம் என்றும் எச்சரிக்கை செய்கிறான். 'வேதநூல் மரபு' என்று பிராமண பாரம்பரியம் ஓதிக் கொண்டிருப்பதில் பயனில்லை யென்கிறான்:

வேதநூல் மரபுக்(கு)
ஏற்ற ஒழுக்கமே
பிடிக்க வேண்டும்.

ராவணாதி ராட்சஸர்களும் 'வேத நூல் மரபு' குறித்துப் பெருமை கொண்டவர்களே!



'ஸத்தியாக்கிரக' விபீஷணன்

எச்சரிக்கை செய்த பின் விபீஷணன் தன் கொள்கையைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் வெளியிடுகிறான்:

தீயவை செய்வ
ராகில், சிறந்தவர்,
பிறந்த உற்றார்,
தாயவை தந்தை—
மார்என்(று) உணர்வரோ
தருமம் பார்ப்பார்?

[சிறந்தவர் – வேறு வகையில் சிறந்தவர்கள். பிறந்த உற்றார் – உடன் பிறந்த உறவு முறை உள்ளவர்கள். தாய் அவை– அவ்வை (ஔவை) என்று சொல்லத் தக்க சிறப்பு வாய்ந்த தாயார்.]

தரும விரோதிகள் யாராக இருந்தாலும் அவர்களைத் துறக்க வேண்டியது தான் என்பது விபீஷணன் கொள்கை. தருமத்திற்கு உறவினரே தமக்கும் உறவினர் என்ற கருத்துடன், அவசியமானால் தாய் தந்தையரையும் குருமாரையும் கூடத் துறந்து விடுவார்களாம் தருமம் பார்ப்பவர்கள்.

இந்தத் தருமக் கொள்கையின் பெயரால் இரத்த பாசத்தையும் சிந்தி விடுவதா! விபீஷணன் சொல்லுகிறான்:

உடலிடைத் தோன்றிற்(று)—
ஒன்றை அறுத்(து),அதன்
உதிரம் ஊற்றிச்
சுடல்உறச் சுட்டு,
வேறோர் மருத்தினால்
துயரம் தீர்வர்.

[தோன்றிற்று ஒன்றை – தோன்றியதொரு சதைக் கட்டி அல்லது பிளவையை. அதன் உதிரம் ஊற்றி – அதிலுள்ள அசுத்த இரத்தத்தை வெளிப்படுத்தி விட்டு. சுடல் உறச் சுட்டு — காரம் இட்டுச் சுட்டு.]

உடன்பிறப்பை அறுத்துக் கொள்ளலாமா என்றால், உடலில் பிறந்ததையே அறுத்து விடுகிறோமே என்கிறான். அந்த இரத்தத்தையும் ஊற்றி விட்டுச் சுட்டுப் பரிகாரம் தேடுகிறோமே என்கிறான். இது தானே ஸாராம்சத்தில் காந்தியடிகளின் சத்தியாக்கிரகமும்!

மேலும் சொல்லுகிறான் இந்தச் சத்தியாக்கிரகி:

காக்கலாம் நும்முன்
தன்னை எனின்,அது
கண்ட தில்லை;
ஆக்கலாம் அறத்தை
வேறே என்னினும்
ஆவ தில்லை!

[நும்முன் – உம்முடைய தமையனான ராவணன்.]

ராவணனுக்காகத் தருமத்தை வேறே படைத்துக் கொள்ள முடியுமா ?—என்று கதறுகிறது சத்தியாக்கிரக இதயம்.

முடிவுரையில் விபீஷணன்

சத்தியாக்கிரக தத்துவம் கூறியதும், முடிவுரை கூறி விடுகிறான். 'போரில் தான் வென்று வாழ்ந்தாயா நீ?' என்று தொடங்குகிறது முடிவுரை :

மறம்கிளர் செருவில்
 வென்று வாழ்ந்திலை ;
 மண்ணின் மேலா
இறங்கினை இன்று
 காறும், இளமையும்
 வறிதே போக,
உறங்கினை என்ப
 தல்லால், உற்றதொன் (று)
 உளதோ ?

[மறம் கிளர் செருவில் – வீரம் விளங்குகிற போரில். மண்ணின் மேலா—பூமியின் மேலே. இன்று காறும் – இன்று வரையிலும். வறிதே – வீணே. உற்றது ஒன்று – நீ பெற்ற நற்பயன் ஒன்று.]

இக் கேள்வி அந்த வீரனின் மனச்சாட்சிமீது மண்டிக் கிடந்த சாம்பலை ஊதி ஜொலிக்கச் செய்யுமோ ?—என்று பார்க்கிறான்.

'இந்த உன் உறக்கம் ஒழிக; நீ நீடுழி வாழ்க!' என்கிறான். அவன் அருளால் இது சாத்தியம் என்கிறான்.

தருமம் என்பது ஓர் அருமையான வயல்; பட்டி மாடுகள் விழுந்து பயிரை அழித்துவிட முடியாது; ஒரு கதிரையும் முற்றும் அழிக்க முடியாது என்கிறான்.

காவற்காரன் சும்மா பார்த்துக் கொண்டிருப்பானா! ஒரு தானிய மணியும் வீணாகக் கூடாது என்று கண்ணும் கருத்துமாய் இருக்கிறானும்.

யார் இந்தக் காவற்காரன் ! விபீஷண மகாவாக்கியம் இது :

மூவர்க்கும் தலைவ—
 ரான மூர்த்தியார்
 அறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து
 நின்றார் காகுந்த
 வேடம் காட்டி !

[காகுத்த வேடம் காட்டி – ராமனாக வேஷம் போட்டுக்கொண்டு.]

'நீ தருமத்தைச் சேர்ந்து கொண்டால் என்ன பலன் ஏற்படும் ?' என்பதையும் கும்பகர்ணனுக்குத் தெளிவு படுத்துகிறான்;— எவ்வளவு உருக்கமாக :

உன்மக்க ளாகி
 யுள்ளார், உன்னொடும்
 ஒருங்கு தோன்றும்
என்மக்க ளாகி
 யுள்ளார், இக்குடிக்(கு)
 இறுதி சூழ்ந்தான்
தன்மக்க ளாகி
 யுள்ளார் தலையொடும்
 திரிவ ரன்றே !

இனி, முடிவுரை முடிவுறுகின்றது ;

' வேதநா யகனே
 உன்னைக் கருணையால்
 வேண்டி விட்டான்,
காதலால் என்மேல்
 வைத்த கருணையால் ;
 கருமம் ஈதே ;
ஆதலால் அவனைக்
 காண, அறத்தொடும்
 திறம்பா(து) ஐய !
போதுவாய் நீயே '
 என்னப் பொன்னடி
 இரண்டும் பூண்டான்.

[திறம்பாது – மாறுபடாமல். போதுவாய் – வருவாய்.]

எல்லாரிடத்திலும் பொதுவாகக் கருணை வைத்திருக்கிறானும் ராமன், விபீஷணனிடத்திலோ காதலும் விசேஷ கருணையும் வைத்திருக்கிறானும். அந்தக் குலத்தையே அடைந்து அருமைத் தம்பியும் ஆகி விட்டானல்லவா !

பேருரையின் முடிவுரைப் பகுதியும் முடிந்து விட்டது. 'ராமபிரானே உன்னை வேண்டிக் கொள்ளும்படி என்னை அனுப்பி வைத்தான்' என்று சொல்லிக் காலில் விழுந்து மன்றாடுகிறான் விபீஷணத் தம்பி.

* * *

இந்தப் பேருரை சிந்தனைக்கும் உணர்ச்சிக்கும் விருந்து. அந்தராத்மாவுக்கு ஓர் அற்புதத் தூண்டுகோல்.

நடையில், ஒய்யாரம் இல்லை. ஆடம்பரமோ, அலங்காரப் பகட்டோ இல்லை. வேத வாக்கியங்களைப் போல் சுடர்கின்றன சத்தியாக்கிரக சிந்தனைகள், போதம் கரைந்து. பொங்கும் பரிவுடன்.



112. இப்படி ஒரு குணசித்திரம்

கலங்கிய கண்கள் இப்போது கண்ணீர் சொரியவில்லை : புண்-நீர் பொழிகின்றன. 'அந்தப் பார்வை அழித்து விடுமே!' என்று கூடத் தோன்றுகிறது : அவ்வளவு கொடும் பார்வை.

நேசம் தழுவிய நெஞ்சில் போய் விழுந்தது தர்மோபதேசம். 'ஐயோ! இந்தத் தம்பியை மீறிப் பேச வேண்டியிருக்கிறதே; இந்தப் பாசத்தை அறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே' என்று ஒரு கணம் அஞ்சுகிறது, எம பாசத்திற்கும் அஞ்சாத இந்த அண்ணன் நெஞ்சு. இந்தக் காட்சியை இதோ பாருங்கள் :

தும்பியந் தொடையல்
மாலைச் சுடர்முடி
படியில் தோயப்
பம்புபொற் கழல்கள்
கையால் பற்றினன்
புலம்பும் பொற்றோள் –
தம்பியை எடுத்து
மார்பில் தழுவினன்,
தறுக ணூடு
வெம்புனீர் சொரிய
நின்றான், இனையன
விளம்ப லுற்றான்.

[தும்பி – வண்டுகள். அம் தொடையல் மாலை – அழகாய்த் தொடுத்திருக்கிற பூமாலை. படியில் – பூமியில். பம்பு–பரவிய. பற்றினன் புலம்பும்–பற்றினவனாப் புலம்புகிற. தறுகணூடு – அழித்துவிடுவது போலப் பார்த்த கண்களின் வழியாய். வெம்புனீர் – வெப்பமுள்ள இரத்த நீர். இனையன–இவ்வாறான சொற்களை. விளம்பலுற்றான் – சொல்லத் தொடங்கினான்.]

தம்பியை எடுத்து மார்பில் தழுவிய வண்ணம் கும்பகர்ணன் உலகத்தையே சுட்டுப் பொசுக்கி விடுவது போல் தீ விழிக்கிறான்! போராட்டத்திற்கு முன் ஒரு போராட்டத்திற்குத் தயாராகி விடுகிறான்.

விபீஷண பாசத்தை முனனிட்டு ராவணனுக்குத் தானும் உபதேசம் செய்து பார்த்தான். ராவண பாசத்தை முன்னிட்டு அவனுக்காக உயிரைக் கொடுக்கவும் முற்பட்டு வந்தான், அதாவது, 'யமபாசத்திற்கும் இலக்காவேன்' என்று வந்து விட்டான்.

இந்த நிலையில் விபீஷணனும் தர்மமும் இப்படி மறுபடியும் வந்து குறுக்கே விழுந்தால் என் செய்வது!

விபீஷண பாசத்துடன் இப்போது போராடித்தான் ஆகவேணும் என்று துணிகிறான். 'அட தம்பி! நான் ராவணனுக்காக உயிரை விடுவேன்; நீ திரும்பி ராமனிடம் போய் வாழவேண்டும்' என்று கண்டிப்பாய்ச் சொல்லி விடுகிறான்.

இந்தக் கண்டிப்பான வார்த்தையிலும் எவ்வளவு பாசம் — ராவண பாசமும் விபீஷண பாசமும் :

' நீர்க்கோல வாழ்வை
நச்சி, நெடிது நாள்
வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து
விட்டாற்(கு) உயிர்கொடா(து),
அங்குப் போகேன் ;
தார்க்கோல மேனி
மைந்த ! என் துயர்
தவிர்த்தி யாகில்


கார்க்கோல மேனி —
யானைக் கூடுதி
கடிதின் ' என்றான்.

[நீர்க்கோல வாழ்வை — நீரில் எழுதிய கோலம் போன்ற இந்த வாழ்க்கையை. நச்சி — விரும்பி. செய்து விட்டாற்கு — செய்து விட்ட ராவணனுக்காக. தார்க் கோல மேனி — மாலை யணிந்த அழகிய மேனி. கார்க்கோல மேனியானை — மேகம் போன்ற அழகிய திருமேனியையுடைய ராமனை. கூடுதி கடிதின் — விரைவில் கூடுவாய்.]

கும்பகர்ண வேதாந்தம்

இரத்த பாசத்தால் கட்டுண்டு அதற்கு அப்பால் வாழ்வே இல்லை என்றிருக்கும் கும்பகர்ணன், தன் கூட்டிலிருந்தே தன்னைச் சிறைப்படுத்தும் ஒரு தத்துவக் கொள்கையை இழைத்துக் கொள்கிறான். 'விபீஷணா! உன் வேதாந்தம் உனக்கு ; என் வேதாந்தம் எனக்கு' என்று, இரண்டு பாசங்களுக்கிடையே உழலும் நிலையிலும் ஒரு 'வேதாந்தம்' காண்கிறான்.

தன்னுடைய கொள்கையால் விளையக் கூடிய மரணத்தை 'வீர மரணம்' என்று



கூடக் குறிப்பிடவில்லை. ஏன், இழிவு பொருந்திய மரணம்—'புலையுறு மரணம்' என்று குறிப்பிடவும் தயங்கவில்லை.

விபீஷணனது வாழ்வுச் சிறப்பையும் உணர்ந்து பேசுகிறான்:

உலைவிலாத் தருமம்
பூண்டாய் ; உலகுள
தனையும் உள்ளாய் ;
தலைவன் நீ உலகுக்
கெல்லாம் ; உனக்(கு) அது
தக்க தேயால்;

புலையுறு மரணம்
எய்தல் எனக்(கு)இது
புகழ தேயால் !

[உலைவிலா — அழிவில்லாத. உலகு உளதனையும் — உலகு உள்ளவரையும்.]

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, கும்பகர்ணனது கொள்கை மேலும் தெளிவடைகிறது. 'உடலில் பிறந்த பிணவை யல்ல உடன் பிறப்பு; அந்த உபமானம் பொருத்த மில்லை' என்று கருதுகிறது இந்த உள்ளம்.

'சோற்றுக்கடனும் செய்ந்நன்றியும் துறக்கத் தக்கன அல்ல' என்று மனச் சான்றும் சாட்சி சொல்லுகிறது.

கருத்திலா இறைவன்
தீமை கருதினல்
அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகில்
நன்றே திருத்தலாம்

[இறைவன் — தலைவனுன ராவணன். காத்து — (இங்கே) தடுத்து. நன்றே திருத்தலாம் — திருத்துவது நல்லதே.]

என்ற அளவிற்கு விபீஷணன் கொள் கையை ஒப்புக் கொண்டு அப்பால் போக மறுத்து விடுகிறுன்.

இந்த நிலையில் தலைவனுக்கு முன்னம் செத்துக் கவலை தீர்வதே தருமம் என்று கூடக் கும்பகர்ணனுக்குப் படுகிறது. வீரதர்மத்திற்குத் தக்க தத்துவ அடிப் படை இருப்பதாகவும் இந்த உள்ளம் நம் புவது போலக் காண்கிறது:

உண்மையில் கும்பகர்ண வேதாந்தம் ஆழ்ந்தகன்ற தத்துவ அஸ்திவாரத்தில் நிற்க வில்லை. உணர்ச்சி வசமாகவே உரு வாகி நிற்கப் பார்க்கிறது.

உம்பரும் பிறரும்
காண, ஒருவன்மூ—
வுலகை ஆண்டான்,
தம்பியர் இன்றி
மாண்டு கிடப்பனே,
தமையன், மண்மேல்?

[உம்பரும் — தேவர்களும். ஒருவன் தமையன் — ஒருவனுன என் தமையன்.]

என்ற கேள்வியை நோக்குங்கள்.

'படைவீரர்கள் பக்கத்திலே விழுந்து கிடப்பார்கள்; மற்றை உறவினர்கள் உயி ரைக் கொடுப்பார்கள்; ஆனல் தம்பிய ரின்றி என் தமையன் படுகளத்தில் இரத் தம் தோய்ந்த மண்ணில் படுத்துக் கிடப் பானு!' என்ற இந்தக் கேள்வியில் கும்ப கர்ணனுடைய நிலை — அசைக்க முடியாத நிலை — புலனுகி விடுகிறது, விபீஷணனின் தத்துவஞானக் கண்களுக்கும்.

அண்ணன் படுகளத்து மண்மேல் மாண்டுகிடக்கும் போது தம்பி சிங்காத னத்தில் கொலுவீற்றிருப்பதைக் கும்ப கர்ணனுல் நினைத்துப் பார்க்கவும் முடிய வில்லை. வெள்ளியங் கிரியை நெருங்கிப் பேர்த்த தோள்கள் காலபாசத்தால் கட்டப்படுமே, ராவணேச்வரன் தனக் குத் தோற்று அஞ்சிக்கிடந்த யமனுடைய இருப்பிடத்திற்குக் கூசிக் கொண்டு தானே போக வேண்டியிருக்கும் — அப் போதும் தம்பி துணை வேண்டாமா!

இப்படி யெல்லாம் குமுறுகிறது, கொந்தளிக்கிறது கும்பகர்ணனுள்ளம். இந்தக் கொந்தளிப்பிலே,

மானிடர் இருவரை
வணங்கி, மற்றும்அக்
கூனுடைக் குரங்கையும்
கும்பிட்(டு) உய்தொழில்
ஊனுடை உம்பிக்கும்
உனக்கு மேகடன் !

என்று ராவணன் ஏசிக் காட்டியதில் எவ்வளவோ உண்மை இருக்கத்தான் செய்கிறது என்று தோன்றுகிறது இப் போது.

கும்பிட்டு வாழ்வதும் ஒரு வாழ் வாமோ! அது விபீஷணனுக்குக் கடனுகி விட்டாலும், தனக்கு எப்படிப் பொருந் தும்! இப்படி மனச்சாட்சியே இடித்துக் கேட்பது போலத் தோன்றுகிறது கும்ப கர்ணனுக்கு.

கும்பிடுவது யாரை, எதற்காக! ராவண பாசத்துடன் வெளியிடும் கொள்கை இது:

செம்பிட்டுச் செய்த
இஞ்சித் திருநகர்ச்
செல்வம் தேறி,
வம்பிட்ட தெரியல்
என்முன் உயிர்கொண்ட
பகையை வாழ்த்தி,
அம்பிட்டுத் துன்னம்
கொண்ட புண்ணுடை
நெஞ்சோ(டு) ஐய !
கும்பிட்டு வாழ்கி
லேன்யான் கூற்றையும்
ஆடல் கண்டேன்.

[செம்பிட்டுச் செய்து — செம்பு கொண்டு செய்த. இஞ்சி — மதில். தேறி — (இங்கே) நிச்சயமானதென்று நினைத்து. வம்பிட்ட — வாசனை பொருந்திய. தெரியல் என்முன் — மாலையணிந்துள்ள என் தமை யன். துன்னம் கொண்ட — தையல் இட்

டுக் கொண்ட கூற்றையும் ஆடல் கண்டேன் — யமனையும் என் இஷ்டப்படியே கூத்தாடச் செய்த வலிமையுள்ள நான்.]

'இந்த அரசுரிமைச் செல்வத்திற்காக என் தமையனைக் கொன்ற பகைவனுக்குப் பல்லாண்டு பாடுவேனா!' என்று கொதிக்கிறது நெஞ்சு. கூற்றையும் ஆடல் கண்ட கொற்றத்திற்குக் கும்பிடத் தெரியுமோ!

அம்பு துளைத்த இடத்தைத் தையலிட்டுப் புண்ணையும் ஆற்றிக் கொள்ளலாம். ஆனால் குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்குமே,—இந்த ஆறாப் புண்ணுக்கு மருந்தும் உண்டா!

வேதாந்தம் வெளியாகிறது!

விபீஷணன் கொள்கை தன் மனச்சாட்சிக்கே பிடிக்கவில்லை யென்பது போலப் பேசி விடுகிறான் இப்போது கும்பகர்ணன். ராமலட்சுமணரை 'அறப் பெருந்துணைவர்' என்றும், விபீஷணன் அபயம் பெற்றது பெரும் பேறு என்றும் ஏற்கெனவே சொன்னதையெல்லாம் மறந்து விட்டது போலப் பேசுகிறான்.

அப்போது பேசியது விபீஷண பாசத்தால்; இப்போது பேசுவதோ ராவண பாசத்தால். ராவணனை எவ்வளவு பெருமையுடன் 'என் தமையன்' என்று குறிப்பிடுகிறான்! விபீஷணனுக்கு ராவணன் தம்பி என்ற அந்தப் பெருமையில் பங்கு கிடையாதாம். விபீஷணனே துறந்து விட்ட பதவிதான்!

விபீஷண பாச வெறியில் ராவணனை இடித்து அறிவுறுத்த முயன்றான், ராவண பாச வெறி இப்போது குடிவெறி போல் தலைக்கு ஏறிவிடுகிறது.

கனி தொடர் குரங்கின்
சேனைக் கடலையும்
கடந்து, மூடும்
பனி துடைத்(து) உலகம்
சுற்றும் பரிதியில்
திரிவன் பார்த்தி!

[கனி தொடர்—கனி யிருக்கும் இடம் நோக்கித் தொடர்ந்து போகிற. பரிதியில்—சூரியன் போல. பார்த்தி—பார்ப்பாய்.]

என்று கர்ஜிப்பதைக் கேளுங்கள்.

கனி யிருக்கும் இடம் தேடி ஓடி ஒளித்துக் கொள்ளும்படி குரங்கின் சேனையைச் சிதறடித்து விடுவானாம்.

தோற்றுப் போன பட்டாணி வீரர்களை, இவ்வளவு விரைவாக மறைந்து விட்டார்களே என்று தேடிப் பார்த்தார்களாம் எதிரிகள். ஷர்பத் புட்டிகள் நிறைய அடுக்கி வைத்திருந்த இடங்களில் புட்டிகளுக்கிடையே மறைந்து அந்த மதுர பானத்தைப் பருகிய நிலையில் கண்டு பிடிக்கப் பட்டார்களாம்.

'செத்தால் ஷர்பத்து சாப்பிட முடியாதே!' என்று தான் அங்கேயே ஒளித்துக் கொண்டு அந்தப் பானத்தை அப்படி ரஸித்தார்களாம்.

இந்த மாதிரி அனுமன் முதலான வானர வீரர்களையும்,


கனி தொடர் குரங்கின்
சேனை

யாகக் காட்டுவேன் எனச் சீறுகிறான்.

சூலமும் கையுமாக இவன் வானர சேனையைத் துரத்தி ஓடும் போது ஒரு கடல் வேறொரு கடலை ஓடித் தொடர்வது போலத் தோன்றுமாம். அந்தப் போரின் விசையால் கடலும் காற்றும் நெருப்பும் பூமியும் எல்லாம் நிலைகுலைந்து ஓடுவது போலக் காணப்படுமாம். இந்த வெறி,

ஒருவரும் திரிய
ஒட்டேன் உயிர் சுமந்(து)
உலகில்!

என்ற முழக்கத்துடன் முடிவுறுகின்றது.



'தாமதியாமல் திரும்பிப் போ; உன் புதிய நண்பர்களிடம் போய் விடு. என்னோடு இன்னும் பேசிக் கொண்டிருப்பதால் புதிய விளைவு ஒன்றும் ஏற்படுவதற்கு இல்லை' என்று சொன்ன பிறகும், கும்பகர்ணன் விபீஷணனை மீண்டும் எடுத்துத் தழுவிக் கொண்டான். மார்பு இறுகத் தழுவிக் கொண்டதாகக் காட்டுகிறது கவிதை.

'அண்ணா, நீ உயிர் தப்பிப் போதல் அரிது. ஓடிப் போனாலும் புகலிடம் கிடையாது; சாதல் ஒன்றே நிச்சயம்' என்று சொன்ன விபீஷணனுக்கு விடையாக,

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

113. இத் திறவுகோல்

கும்பகர்ண இருதயம்

'விரைவில் திரும்பி விடு' என்று அவசரப்படுத்திய அண்ணன், இப்போது இறுகத் தழுவிக் கொண்டிருக்கும் தம்பியை உடனே விட்டுவிட வில்லையாம். விட்டால்தானே விபீஷணன் தாமதியாமல் ராமலட்சுமணரிடம் போய்ச் சேர முடியும்?

இறுகத் தழுவிய நிலையில் அழுகை வந்துவிடுகிறது கும்பகர்ணனுக்கு. அப்படியே அழுது ஏங்கிப் போய் இருக்கிறான்.

சற்று முன்புதானே வீராவேசம் பேசினான். அனுமன் முதலான வானர வீரர்களையும் கனிகளைத் தொடர்ந்து செல்லும் குரங்கினத்தோடு சேர்த்துப் பேசி விட்டான். அந்த வீர நெஞ்சு இப்போது ஈர நெஞ்சாய் உருகிப் போகிறது.

மூடுபனியைச் சூரியன் போக்குவது போல் அவ்வளவு அநாயாஸமாகப் பகைப் பனியைத் துடைத்து விடுவேன் என்று கர்ஜித்த சிங்கம், இப்பொழுது கண்கள் பனி சோர இரங்கி நிற்கிறது.

சூலத்தோடு திரியும் காற்றாடி போலச் சுழன்று, பொங்கிப் புடை பெயர்ந்து போகும் கடல் போலத் தொடர்ந்து எதிரிகளைப் பயமுறுத்தித் தெறடித்து விடுவதாகப் பேசிய ஆவேசம், இப்போது சகோதர நேசத்திலே கரைந்து கண்ணீராய்ப் பொங்குகிறது.

ஒருவரும் திரிய
ஓட்டேன் உயிர்சுமந்து

என்று இறுமாந்து பேசினான் கும்பகர்ணன்.

அதே கும்பகர்ணன் இப்போது தம்பியை இறுகத் தழுவி,

நின்றுநின்(று) இரங்கி
ஏங்கி நிறைகணால்
நெடிது நோக்கி,

[இரங்கி — (இங்கே) அழுது. நிறைகணால் — நீர் நிறைந்த கண்களால்.]

தம்பியை விட்டு விட



மனமில்லாதவன் போல் காணப்படுகிறுன் நெடிது நேரம்.

நெடிது நோக்கி நெடுமூச்சு விட்டுக் கடைசியாகத் தம்பியை விட்டுவிடுகிறுன். இந்தத் தம்பியும் இப்போது விரைந்து போய் விடவில்லை.

தன் அன்புப் பிடியிலிருந்து தம்பியை விடுதலை செய்கிறுன் கும்பகர்ணன், பெரு மூச்சுடன் வரும் ஒரு வார்த்தையுடன் :

'இன்ஞெடும் தவிர்ந்த
தன்றே உடன்பிறப்பு!'
என்று விட்டான்

மூச்சுடன் வரும் இப்பேச்சையும் நம் காதில் விழச் செய்யும் கவிஞன், கும்ப கர்ணனுடைய நேசத்தையும் கும்பகர்ண ஆகிருதியிலேயே காட்டிவிடுகிறுனல்லவா!

குணுதிசய முரண்பாடுகள்

இந்தக் கும்பகர்ண அன்பு, தர்மாத் மாவும் சத்திய ஞான வீரனுமாகிய விபீ ஷணனையும் உணர்ச்சி வசமாக்கி விடு கிறது. வந்ததும் காலில் விழுந்தது போல், கும்பகர்ணன் விடை கொடுக்கும் போதும் அந்த அண்ணன் காலில் விழு கிறுன் வீபீஷணன்.

இந்த இருவரையும் ஒரே படத்தில் பார்க்கிறேம்;

என்(று)அவன் தன்னை
மீட்டும் எடுத்து மார்(பு)
இறுகப் புல்லி,

நின்று நின்(று) இரங்கி
ஏங்கி நிறைகணுல்
நெடிது நோக்கி,

'இன்ஞெடும் தவிர்ந்த
தன்றே உடன் பிறப்(பு)'
என்று விட்டான்;

வென்றிவெந் திறலி–
ஞனும் அவன் அடித்–
தலத்து வீழ்ந்தான்.

[புல்லி–தழுவி. வென்றி வெந் திறலினுனும்–வெற்றியும், விரு ம்பத்தக்க திறமையும் உள்ள விபீஷணனும்.]

'இன்ஞெடும் தவிர்ந்ததன் றே' என்று கண்ணீரில் நனைந்து பெருமூச்சுடன் வெளிவரும் இந்த வார்த்தையில் கும்பகர்ண குணுதிசயத்தின் ஜீவநாடி துடி துடிக்கக் காணலாம்.

எம பாசத்திற்கும் அஞ்சாத கும்பகர்ண வீரன் உடன் பிற ப்பு என்ற பாசத்திற்கே வசீகர மாகிறுன். இந்தப் பாசம்தான், ராவணன் விபீ ஷணன் என்ற இரண்டு முரண் பாடுகளையும் கும்பகர்ணன் ஒருங்கே காதலிக் கக் காரண மாகும்.



அன்பு குருடு என்று கூறுகிறார்களே, அது முற்றும் உண்மைதானே! கும்ப கர்ணனுடைய அன்பு ராவணனையும் விபீ ஷணனையும் ஒருங்கே தெரிந்து கொண்டு நேசிக்க உதவுகிறது.

விபீஷணன் அபயம் பெற்றதைக் கூட உவந்து பாராட்டுகிறான் கும்பகர்ணன். எனினும்,

> கும்பிட்டு வாழ்கி
> லேன்யான்

என்று அந்தச் சரணாகதி நிலையையும் கண்டிக்கிறான். சகோதர பாசத்தால், உடன் பிறப்பு என்ற நேசத்தால் விளைந்த முரண்பாடு இது!

விபீஷணனுடைய பெருந் துணைவர்க ளான ராம லட்சுமணரை அறப் பெருந் துணைவர் என்று ஒப்புக் கொள்ளும் கும்ப கர்ணன், ராவணனுடைய கண்களை இசைத்துக் கொண்டு எளிதில் ஊதிவிடக் கூடிய பனி போன்ற பகையாகவும் பார்க் கத்தானே செய்கிறான்.

'பிறப்பெனும் புன்மை' என்கிறான் ராட்சஸப் பிறவியை. இந்தச் 'சாதியின் புன்மை' தவிர்க்கத் தக்கதே என்றும் அபிப்பிராயப் படுகிறான். எனினும் சாதிச் செருக்கு வெளிப்பட விபீஷணனது தர்மத்தைத் தூவென்று தள்ளி விடுகி றான்.

விபீஷணன் என்ற உடன் பிறப்பை நோக்கும் போது தன் கட்சி தோற்ற கட்சியாகவே படுகிறது கும்பகர்ண னுக்கு. ராவணன் என்ற உடன் பிறப்பை நினைத்துப் பார்க்கும் போதோ, ராம லட்சுமணரை உள்ளிட்ட எதிரிகளை யெல்லாம் ஒழித்து விடலாம் என்று கூடத் தோன்றுகிறது.

எல்லாம் உடன் பிறப்பால் விளையும் முரண்டும் முரண்பாடும்தான்.

சத்தியாக்கிரகியின் இருதயம்

(தங்கத் திரவுகோல்)

விபீஷணனையும் உடன்பிறப்பு என் னும் பாசம் கட்டிப் பிடிக்கத்தான் செய் கிறது. அதனால் தானே 'என் அண்ணன் கும்பகர்ணன் இன்று காலன் முன் வந்து விட்டான்!' என்று ராமனை நோக்கிச் சொல்லி விடுகிறான்.

சகோதர பாசத்தால் தானே கும்பகர் ணனை வழிப்படுத்த முயல்கிறான் விபீஷ ணன்; வழிப்படுத்த முடியும் என்று கூட நம்பி விட்டானே! இதே சகோதர பாசம் விபீஷணனுக்கு ராவணன் மீதும் ஏற்பட்டிருக்கவில்லை யென்று கருதுவது சுத்தப் பிசகு.

ராவணனையும் திருத்த முடியுமென்று இயன்றவரை முயன்று பார்த்தவன் தானே. இந்த முயற்சிகளெல்லாம் பயன்பட வில்லை யென்று கண்டதும் ராவணனுக்காக அறத்தை வேறே ஆக் கிக் கொள்ள முடியாது என்று துணிந்து விலகி விட்டான். தர்மத்திற்காக, சத் தியத்திற்காக, சகோதர பாசத்தையும் அறுத்துக் கொள்ளும் பெரு வீரன் விபீ ஷணன்.

இந்தத் தனிப் பெரு வீரத்திற்கும், கும்பகர்ணனுக்கும் தொடர்பில்லை. ஆகவே தான், ராவணனுக்காக உயி ரைக் கொடுக்கிறான். விபீஷணனோ, ராவண குல நாசத்திற்கும் கருவியாகி விடுகிறான்.

விபீஷண சத்தியாக்கிரகியின் உள்ளத் திலே ராவணன் விஷயமாகவும் கும்ப கர்ணன் விஷயமாகவும் ஒரு பெரும் போராட்டம் நடந்தது என்பதில் ஐய மில்லை. அந்தப் போராட்டத்திலே உடன்பிறப்பை வென்றது தருமம்.

கும்பகர்ணன் விஷயமாக விபீஷணன் உள்ளத்தில் நிகழ்ந்த போராட்டத்தை நமது மனக்கண்ணுக்கு எவ்வளவு தெளி வாக இலக்காக்குகிறது இப்பாட்டு:

> வணங்கினான், வணங்கிக்
> கண்ணும் வதனமும்
> மனமும் வாயும்
> உணங்கினான்; உயிரோ(டு)
> யாக்கை ஒடுங்கினான்;
> 'உரைசெய்(து) இன்னும்
> பிணங்கினால் ஆவ(து)
> இல்லை, பெயர்வ(து)', என்று
> எழுந்து போனான்,
> குணங்களால் உயர்ந்தான்,
> சேனைக் கடலெல்லாம்
> கரங்கள் கூப்ப.

[உணங்கினான் — உலர்ந்தான். உயி ரோடு யாக்கை — உயிரும் உடம்பும், பெயர்வது — புறப்பட்டுப் போவதே தக் கது. குணங்களால் உயர்ந்தான் — விபீஷணன்.]

குணங்களால் உயர்ந்தவன் விபீஷணன் என்பதற்கு, அந்த ராட்சஸக் கடல் எல் லாம் கைகூப்பப் போனான் என்று காட்டு

வதைப்போல் வேறொரு சான்றும் இருக்க முடியுமா!

இந்தப் பாட்டில் 'சேனைக் கடல் எலாம் கரங்கள் கூப்ப' என்பது விபீஷண குணநிசயத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்.

காந்தியடிகள் பிரிட்டிஷ் அரசப்பிரதிநிதியின் அரண்மனைக்குப் போய் உரையாடி மீண்டு வந்தார். எவ்வளவோ பணிவுடன் தேச விடுதலைக்காக மன்றாடிப் பார்த்தார். 'உரை செய்து இன்னும் பிணங்கினால், ஆவது இல்லை' என்றுதான் திரும்பி வந்தார்.

போன காரியம் தோல்வி என்று எல்லாருக்கும் தெரியும். எனினும் அரசப் பிரதிநிதிக்கு உட்பட்ட அதிகார வர்க்கத்தினர், ராணுவ வீரர், போலீஸ் படையினர், வெள்ளையர், கறுப்பர் எல்லாரும் ஒரே கடலாகக் கை கூப்பி நின்றார்கள்; குணங்களால் உயர்ந்த (ஜனப்பிரதியான) மகாத்மாவை.

அன்று காந்தியடிகளுக்கு நிகழ்ந்தது தான் கம்பனின் மானஸ உலகத்திலே விபீஷணனுக்கும் நிகழ்ந்தது! மகா கவிகளின் மேதையில் தீர்க்கதரிசனமும் ஓர் அம்சம்தானே.

போய்க் கொண்டிருக்கும் விபீஷண அரக்கர் வணக்கத்துடன், கும்பகர்ணனுடைய கண்களும் தொடர்கின்றன, இவன் மறைந்து போகும் வரை. எத்தகைய உணர்ச்சி இப்போது கும்பகர்ணனை ஆட்கொள்ளுகிறது!

முகத்தோடு அகத்தையும் பார்க்கும் கவிஞன் காட்ட, நாமும் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்:

கள்ள நீர் வாழ்க்கை
யேமைக் கைவிட்டுக்
காலும் விட்டான்,
பிள்ளைமை துறந்தான்
என்னப் பேதுறு
நிலைய னாகி,
வெள்ள நீர் வேலை
தன்னில் வீழ்ந்த நீர்
விழ வெங்கண்
உள்ள நீர் எல்லாம்
மாறி உதிர நீர்
ஒழுக நின்றான்.

[கள்ள நீர் — கள்ள நீர்மை; கள்ளத் தன்மை. வாழ்க்கையேமை — வாழ்க்கையுடைய எங்களை. காலும் விட்டான் — போய் விட்டான். பிள்ளைமை — பிள்ளைமைச் செல்வத்தை. பேதுறு நிலையனாகி — பித்தங் கொண்டவனைப் போல் கலங்கிய மன நிலை உடையவனாகி. வேலை தன்னில் வீழ்ந்த நீர்—கடலில் விழும் தன்மையுள்ள ஆற்று நீர். வெங்கண் உள்ள நீர்—கொடிய கண்ணிலுள்ள நீர். உதிரநீர் ஒழுக — இரத்த நீராகப் பெருகும்படி.]

தழுவிய கையைத் தளர விடும்போது, கும்பகர்ணன் சொன்னதெல்லாம்,

இன்றொடும் தவிர்ந்த
தன்றே உடன்பிறப்பு

என்பதுதான். இப்போது விபீஷணன் தலை மறையும் சமயத்தில்,

பிள்ளைமை துறந்தான்!

என்ற நிலையே வந்து விடுகிறது.

ஒருவனுக்கு ஒரே பிள்ளை. அந்தப் பிள்ளை இறந்துபோனான் என்றால், அந்தப் புத்திர சோகம் அவனை என்ன பாடு படுத்தும்! 'ஐயோ, என் பிள்ளைமைச் செல்வத்தைப் பறி கொடுத்தேனே' என்று நிலை கலங்கி மதிமயங்கிப் போவானல்லவா! அது பைத்தியமாக அடித்து விடுமே!

அந்த நிலையைக் கும்பகர்ணன் இப்போது அடைந்து விடுகிறான். இந்தப் பைத்திய வெறியைப் போர் வெறிதான் போக்குகிறது.

பிரிந்த பின்பும் சகோதர பாசம் கும்பகர்ணனை இந்தப் பாடுபடுத்துகிறது; விபீஷணனையோ பாசம் இனி அணுகுவதற்கும் அஞ்சுகிறது. பயிற்சி பெற்று விழிப்புடன் இருக்கும் உள்ளத்திற்கும், உணர்ச்சி வசமாகவே சோம்பியிருக்கும் உள்ளத்திற்கும் இடையே தொலைதூரம்!

விபீஷணன் ராமனை அடைந்து பேசும் வார்த்தையிலேயே விபீஷண குணநிசயத்தின் விசேஷ உயர்வைக் காணலாம்:

எய்திய நிருதர்
கோனும் இராமனை
இறைஞ்சி, 'எந்தாய்!
உய்திறம் உடையார்க்(கு)
அன்றோ அறன்வழி
ஒழுகும் உள்ளம்?
பெய்திறன் எல்லாம்
பெய்து பேசினன்:
பெயரும் தன்மை
செய்திலன் குலத்து
மானம் தீர்ந்திலன்
சிறிதும்' என்றான்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ



114.

வில்லே சொல்ல வேண்டும்

நோயின் மூலத்தைக் கண்டு காட்டும் வைத்தியனைப் போல் கும்பகர்ணனது நிலையைக் கண்டுபிடித்து ராமனிடம் தெரிவிக்கிறான் விபீஷணன். அந்த நோய்க்குக் 'குலத்து மானம்' (ராட்சஸ ஜாதிச் செருக்கு) என்று பெயரும் கொடுக்கிறான்.

முத்திறன்
(மானம், மெய், விதி)

அதனால் தானே கும்பகர்ணன் விபீஷணனுடைய தர்ம வழியைப் பாராட்டிய போதிலும், 'கும்பிட்டு வாழ்கிலேன் யான்' என்று சரணாகதி தர்மத்தையும் கண்டித்துப் பேசி விட்டான். தர்ம வழியிலே செல்லுகிறவர்களுக்கு அதர்மத்தைத் துறந்து அ[illegible]டால் செல்லும் திறமையும் வேண்டும் அல்லவா?

இந்தத் திறமை கும்பகர்ணனுள்ளத்தில் கொஞ்சமும் காணப்படவில்லை என்பதை இப்போது நன்றாகத் தெரிந்துகொண்டான் விபீஷணன். ராட்சஸ ஜாதி கர்வம்தான், (ஜாதி கர்வமே ராட்சஸ குலம்தானே!) அந்தத் திறமையை அப்படிக் குறைத்து விட்டது என்பது குறிப்பு.

விபீஷணனுக்குத் தன் வாக்குவன்மையில் நம்பிக்கை உண்டு. ராவணனிடம் தோல்வி கண்ட போதிலும் இந்த வாக்குவன்மை கும்பகர்ணனிடம் வெற்றி பெறக் கூடுமென்று நம்பினான். இங்கும் தோல்விதான் என்று தெரிந்தும், தன் வாக்குத்திறன் குறித்து விபீஷணனுக்குச் சிறிதும் ஐயம் ஏற்படவில்லை.

பெய்திறன் எல்லாம்
பெய்து பேசினன்

என்கிறானல்லவா!

'உய் திறன்' கும்பகர்ணனிடம் இல்லாத குறைதான் தன் தோல்விக்குக் காரணம் என்கிறான். சொல்லிலே பெய்யத் தக்க

திறன் மெய்தான் — உள்ளொளியாகிய உண்மை தான் என்பது இவன் கருத்து.

விபீஷணன் பெருமுயற்சி செய்து பார்த்தும் கும்பகர்ணனை வழிப்படுத்த முடியாதது கண்டு, 'செய் திறன் இனி வேறில்லை : எல்லாம் விதியின் திறம்' என்கிறான் விதிக்கு நாயகன் :

செய்திறன் இனிவே(று)
உண்டோ ? விதியை யார்
தீர்க்க வல்லார் ?

[கொய் திறச் சடை — கொய்து விடுதற்குரிய தன்மை வாய்ந்த சடை. கற்றை — தொகுதி. கொந்தளம் — மயிர்முடி. கோலக் கொண்டல் — அழகிய மேகம் ;



கொய்திறச் சடையின்
கற்றைக் கொந்தளக்
கோலக் கொண்டல்

நொய்தினில் துளக்கி,
'ஐய ! நினை எதிர்
நும்முனோனை

எய்துறத் துணித்து
வீழ்த்தல் இனிதன்(று) என்று,
இனைய சொன்னேன் ;

(இங்கே) ராமன். நொய்தினில்– லேசாக. துளக்கி – முடியை அசைத்துக் கொண்டு. நும்முனை – உன் தமையனை. எய்துறத் துணித்து–துண்டு படத் துண்டித்து. இனைய – இவ்வாறான வார்த்தைகளை.]

விதியின் வேலை

சடாமகுடத்தோடு கூடிய அழகிய மேகம் என்று ராமனைக் குறிப்பிடுவதும், அந்த முடியை அசைத்துக் கொண்டு ராமன் பேசினான் என்பதும், விபீஷணனுக்கும் ராமனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் – காட்சியைக் கண் முன் கொண்டு வருவதற்கு ஒரு வசீகரமான உபாயமாகும்.

கொய்திறச் சடையின்
கற்றைக் கொந்தளக்
கோலக் கொண்டல்

என்ற வசீகரமான சப்த சித்திரத்திலே ரஸிகரின் அகக் கண்ணுக்குப் பிரத்தியட்சமாகிறது விதிக்கு நாயகமான விஜய சௌந்தரியம்.

ராமனது இனிய உருவத்துடன் இனிய உரையும் செவியில் விழுகிறது. ஏற்கெனவே லங்கேச்வரன் விபீஷணன் தான்.

கும்பகர்ணனை அறவழிப்படுத்த முயன்று அறவே தோல்வியுற்று மீண்ட விபீஷணனை 'நிருதர்கோன்' என்று முந்திய செய்யுளில் கூறியிருப்பதும் நோக்கத் தக்கது.

'என் தலைக்கு இது வேண்டாமே!' என்று தூக்கி யெறிந்தாலும், கிரீடம் கும்பகர்ணன் தலையில் அமர மறுத்து விபீஷணன் தலைக்கே திரும்பி வந்து விடுகிறது. இது விதியின் ஆணை.

முடி சூடுவதற்கு முன்பே விபீஷணன் நிருதர்கோனாகி விடுகிறான். ராமனோ சடை–முடி சூடி விதிக்கும் கோனாக நின்றபடியே ஒன்றும் அறியாதவன் போல் 'விதியை யார் தீர்க்க வல்லார்!' என்று மெள்ளச் சொல்லி, விதிக்கு முடி சூட்டுகிறான்.

விதியை விதிக்கிறான் தன் சட்டமாக இறைவன்: தானும் தன் சட்டத்திற்குக் கட்டுப் படுகிறான்.

'விதியை யார் தீர்க்க வல்லார்!' என்ற வார்த்தை, விதியால் தள்ளப்பட்டு வரும் அரக்கர் சேனை வானர சேனையை வளைந்து கட்டிய வண்ணம் விளைக்கும் போர்–முகத்திலே, உதிரச் சேற்றிலே புதைந்து போகிறது. இதன் விளைவு ராமாயணத்தைப் பூர்த்தி செய்கிறது.

குதிரைகள் ஓடுகின்றன. யானைகள் ஓடுகின்றன. தேர்கள் உருண்டோடுகின்றன. இரத்தம் ஓடுகிறது. விதி ஓட்டுகிறது.

அரக்க வீரர்களும் வானர வீரர்களும் அங்கும் இங்கும் ஓடுகிறார்கள். வேலும் சூலமும் வேறு ஆயுதங்களும் ஓடிப் பாய்கின்றன. இடையே கும்பகர்ணனையும் அவனுடைய தேரையும் ஓட்டிக்கொண்டு வருகிறது விதி.

கும்பகர்ணன் களம் புகுந்ததும் வானரர் பட்டபாடு கொஞ்சமோ! குன்றில் போய் முட்டிக்கொள்ளும் குருவிக் கூட்டங்கள் போல இடர்ப்படுகிறது வானர சேனை. சூலமும் கையுமாய்ப் புன்சிரிப்புடன் வருகிறான் கும்பகர்ணன். விதியும் சிரிக்கிறது.

அங்கதன், முன் வந்து எதிர்த்துத் தோல்வியடைகிறான். இமைப் பொழுதில் அனுமனும் வந்து எதிர்க்கிறான். கும்பகர்ணன் வலிமை கண்டு இவனும் அப்பால் போய்விடுகிறானாம்.

கும்பகர்ணன் தோள் கொட்டிக் கொக்கரிக்கிறான். விதியும் ஆரம்பத்தில் கும்பகர்ணனுக்கு அனுகூலமாக மார் தட்டுகிறது.

வில்லம்புக்கு முன்
ஒரு சொல்லம்பு

லட்சுமணனே எதிர்க்க வந்து விடுகிறான். அம்புகள் பாய்கின்றன. கும்பகர்ணனைச் சூழ்ந்து கொண்டு குதூகலமாயிருந்த அரக்கர்கள் நிலை கெட்டு ஓடத் தொடங்குகிறார்கள்.

இந்த அரக்கர்களை உத்ஸாகப்படுத்தவும், லட்சுமணனைத் தொடர்ந்து வந்த வானர வீரர்களையும் லட்சுமணனையும் கூட மனக் கலக்கம் அடையச் செய்யவும், ஒரு யுக்தி செய்யப் போகிறான் கும்பகர்ணன்.

பழைய போர்க் களங்களில், தலைமை வகித்த வீரர்களே அதி முக்கியமானவர்கள். படை வீரர் கூட்டம் அவ்வளவு முக்கியமல்ல.

பெரு வீரர்களின் தேர்கள் எதிர் எதிராக வந்து நிற்கும். வீரர்களும் முகமுகமாய் எதிர் நின்று உரையாடுவர்; அம்பு போடுவர். இந்த வீரர்களில் யார் தோல்வியடைந்தாலும் தோற்ற வீரனுடைய படை நிலைகலங்கி ஓட்டம் பிடிக்கும். பொறுக்கி யெடுத்த சில வீரர்களின் வெற்றி தான் அந்தப் பண்டைக் காலப் போர்களின் வெற்றி யெல்லாம்.

இனி, நாம் கும்பகர்ணனுக்கும் லட்சுமணனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலைக் கவனிப்போம். கும்பகர்ணன் செய்த வீரவாதம் என்ன ! அதற்கு லட்சுமணன் சொன்ன மறு மொழிக்கும் செவி கொடுப்போம்.

ராவணன் கட்சியில் தரும நீதி இல்லையென்பது கும்பகர்ணன் அறிந்ததே. 'பேசுவது மானம் ; பேணுவது காமம்' என்று கும்பகர்ணன் மந்திராலோசனைச் சபையிலேயே ராவணனைப் பழித்துப் பேசியதுஉண்டு. வீரதர்மத்திற்குக் குறைவான செயலை ராவணன் செய்தான், ராமன் செய்யவில்லை என்பது கும்பகர்ணன் கருத்து. ஆனால் லட்சுமணன் நிலை வேறு என்று தீர்மானிக்கிறான்.

லட்சுமணனும் வீரதர்மத்திற்குக் குறைவான செயல் செய்தவன் தான் என்பது கும்பகர்ணன் கட்சி. சூர்ப்பணகையின் அங்க பங்கத்தை மறந்திருக்க முடியுமா ?

உடன்பிறப்பு என்ற பாச மயமாக இருக்கும் கும்பகர்ணன், ராவணனையும் விபீஷணனையும் ஒருங்கே காதலித்தது போல், தங்கை மீதும் பேரன்பு கொண்டவன் தான்.

அருமைத் தங்கை. மூன்று சகோதரர்களுக்கு ஒரே சகோதரி. இவளுக்கு நேர்ந்த அங்க பங்கம் குறித்து நெஞ்சு புழுங்கிக் கொண்டிருக்கிறது கும்பகர்ணனுக்கு. தன்னுடைய வீர வாதத்திலே இந்த ஒரே விஷயத்தை லட்சுமணனுடைய வீர தர்ம பங்கத்திற்கு உதாரணமாகக் காட்டுகிறான்.

வீர தர்ம ஆவேசமே வந்து விட்ட மாதிரி முழக்குகிறான் :

'பெய் தவத்தின் ஓர்
பெண்கொடி எம்முடன்
பிறந்தாள்,

செய்த குற்றம் ஒன்(று)
இல்லவள் நாசி, வெஞ்
சினத்தால்,

கொய்த கொற்றவ !
மற்(று) அவள் கூந்தல்
தொட்(டு)

ஈர்த்த

கை தலத்திடைக்
கிடத்துவன்; காக்குதி'
என்றான்.

அதிசயமான வீர வாதம். ஒரே பாட்டில் ஒரு முழுப் பேருரை. நெஞ்சு நெருப்பைச் சொல்லிலே சொரிகிறது !

சொல் குறைய, வேகம் ஏறுகிறது

லட்சுமணனுடைய மறுமொழி மிகவும் சுருக்கமானது, இரத்தினச் சுருக்கமானது. ஒரு பாட்டிலே சொன்ன வீரவாதத்திற்கு ஏறக் குறையப் பாதிப் பாட்டில் பதில் சொல்லித் தீர்த்து விடுகிறான் லட்சுமணன்.

'அதோ கும்பகர்ணன், இதோ லட்சுமணன் !' என்று காட்டுவது போல் இருவரையும் நம் கண்ணுக்குப் புலனாக்கி, லட்சுமணன் வார்த்தையை நம் காதில் கொண்டு வந்து போடுகிறது கவிதை :

அல்லினால்செய்த
நிறந்தவன் அனையது
பகர,

மல்லினால்செய்த
மார்பினன், ' மாற்றங்கள்
நும்பால்

வில்லினால்சொல்லின்
அல்லது, வெந்திறல்
வெள்கச்

சொல்லினால்சொலக்
கற்றிலம் யாம் !'எனச்
சொன்னான்.

[அல்லினால் – இருளினால். அனையது – அந்த வார்த்தையை. மல்லினால் செய்த– மற்போரின் வலிமையால் மலர்ச்சி பெற்ற. வெந்திறல் வெள்க – வீரம் என்ற தெய்வம் வெட்கமடையும்படி.]

தான் சுமத்திய குற்றச் சாட்டுக்கு லட்சுமணன் என்ன மறுமொழி தான் சொல்லப் போகிறானே, என்ன தான் சொல்ல முடியும் என்று இறுமாந்து பேசிய கும்பகர்ணன் வாயடைத்துப் போகுமாறு வருகிறது மறுமொழி.

'வார்த்தையா பேசுவது ! உம்மிடத்திலா ! வில்லன்றோ பேசவேண்டும் !' என்கிறான். 'இந்த வார்த்தைக்கே வீரத்தின் அதிதேவதை வெள்கித் தலைகுனிந்துவிடுமே !' என்கிறான்.

'உம்மைப் போல் பேச்சுப் பள்ளியில் கற்றோமில்லை' என்று கூறி முடிக்கிறான். ராமராஜ்யக் கல்வி முறை வேறு ; நாவால் அலட்டுவதில் அறிவுமில்லை, ஆண்மையும் இல்லை என்பது குறிப்பு.

ஓதி ஓதி உணர்ந்து உணர்ந்து இன்புறத் தக்கன வீரவாதமும் விடையும்.

115. புயலும், அமைதியும்

‘மலை பிளந்ததா! மண் கிழிந்ததா!’ விண்ணும் இரு கூறுகி விட்டதா!’ என்று நடுங்குகிறார்கள் ஆகாய வீதியிலே வந்து வேடிக்கை பார்க்கும் தேவர்கள்.


புயல் அடிக்கிறது

லட்சுமணனுடைய மறுமொழிதான் இப்படிக் கும்பகர்ண கோபத்தை மூட்டிவிட்டிருக்கிறது. இளைக்குமாரமனுக்கு இளையவன் கோபம்!

வாக்களித்தபடியே லட்சுமணனும் வில்லினால் பதில் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறான். தேரழிந்து, பெரிய வில்லும் அழிந்த நிலையில் கும்பகர்ணன், காலனைப் போல ஜொலித்த தன் சூலாயுதத்தில் கை வைக்கிறான்.

கும்பகர்ணனுக்குத் துணையாக ராட்சஸப் பெரும் படைகள் திரண்டு வந்து

பி. ஸ்ரீ



ராமாயணம்

லட்சுமணனைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரிக்கின்றன. அந்தச் சேனைக்குள் லட்சுமணன் புகுந்து புகுந்து வில்லினால் பேசும் போதே, கும்பகர்ணன் வேறொரு திசையில் போய்ச் சுக்கிரீவனோடு போர் புரிகிறான்.

இந்தப் போரில் சுக்கிரீவன் மூர்ச்சிக்கவே, கும்பகர்ணன் அவனைத் தூக்கிக் கொண்டு ஊருக்குள் செல்லத் தொடங்குகிறான். வானரரும் வானவரும் பெரிதும் வருந்த, அரக்கர்கள் ஆரவாரிக்கின்றனர்.

இந்த நிலைமையை ராமன் தெரிந்து கொண்டதும், சரக்கூடம் கட்டிக் கும்பகர்ணன் செல்லும் வழியைத் தடுக்கிறான். இந்த அம்பு – மதிலைக் கடக்க முடியாமல் கும்பகர்ணன் போரில் அந்தப் புது நிலைமையைத் தெரிந்து கொள்ளாமலே திரும்பி வந்ததும், ராமனை நோக்குகிறான்.

'உன்னைத்தானே தேடித் திரிகிறேன். உன் படை ஓடி விட்டது; அனுமனும் வலியழிந்தான்; உன் தம்பியும் ஒதுங்கி நடந்தான்' என்கிறான்.

ராம பாணங்களால் அடிபட்டுக் கும்பகர்ணன் மயக்கமடைய, உணர்வு பெற்ற சுக்கிரீவன் கும்பகர்ணனது காதையும் மூக்கையும் கடித்துத் தன் படை வீரர்களுடன் வந்து சேர்ந்து விடுகிறான்.

தங்கைக்கு நேர்ந்தது போன்ற அங்க பங்கம் அண்ணனுக்கும் நேர்ந்து விடுகிறது. எத்தகைய அங்க பங்கம் கண்டு நெஞ்சு ஏற்கெனவே மிகக் கொதித்ததோ, அது தனக்கே நேர்ந்துவிட்டால், மானம் என்ன பாடுபட்டிருக்க வேண்டும்! ஆனால் உடனே மூர்ச்சையடைகிறான்.

விரைவில் மயக்கம் தெளிந்து கும்பகர்ணன் ராமனுடன் போர் புரிய முற்படுகிறான். பெரிதும் புண்பட்ட மானம் ஒரு புதுத் தூண்டுகோலாகிறது போர் வெறிக்கு.

போர் உக்கிரமாக நடைபெறுகிறது. வலக்கை இழந்தும், கும்பகர்ணன் இடக்கையால் போரைத் தொடர்ந்து நடத்துகிறான். இந்தக் கையை இழந்த பின்பும் நடந்து நடந்து வானரக் கடலைக் கலக்குகிறான்.


வலக்காலையும் ராமபாணம் துண்டிக்கவே, ஒற்றைக் காலால் நொண்டியபடி சண்டையைத் தொடர்ந்து நடத்துகிறான். மற்றைக் காலை இழந்த பின்பும் கும்பகர்ணன் போர் செய்வதை நிறுத்தி விட வில்லையாம்.

வாயால் மலைகளைக் கடித்து ஒடித்து மூச்சுக் காற்றால் அவற்றை ஊதித் தள்ளி வானரப் படையைச் சிதைத்ததாக வருணிக்கிறது கவிஞன் மனோபாவம். இத்தகைய செயல் கண்டு ராமனும் கை நடுங்கி நிற்கிறானாம்.

அலை ஓய்ந்த கடல்

இப்படியெல்லாம் போரிடும்போதே, கும்பகர்ணனது வெறி 'புயலுக்குப் பின் அமைதி' போல் அடங்கிப் போக, உள்ளத்திற்குள்ளே ஓர் உணர்வும் துயரும் ஒருங்கே தோன்றுகின்றன.

ராமனும் கைநடுங்க நின்று 'இப்படியும் ஒரு பராக்கிரமமா!' என்று சற்றுத் திகைத்து நிற்கும் போது, கும்பகர்ணனே,



ஐயன் வில்–
தொழிற்(கு)
ஆயிரம் இரா
வணர்
அமைவிலர்;
அந்தோ! யான்
கையும் கால்களும்
இழந்தனன்,
வே(று) இனி
உதவலாம்
துணை காணேன்!

[அமைவிலர் – ஏற்ற வலிமை அமையாதவர் ஆவர். உதவலாம் துணை–உதவக் கூடிய வகை.]

என்று தனக்குள் தானே ராமன் ஆற்றலை வியக்கிறான்.

ராவணனுக்கு இந்த நிலையில் இனி என்ன உதவி செய்யப் போகிறோம் என்றும் கவலைப்படுகிறான். இனி, ராவணன் பிழைக்கும் வகை இல்லை என்றும் துயரப்படுகிறான்.

கைகளும் கால்களும் இழந்ததைக் காட்டிலும் பெருந்துயரம் தருகின்றது, 'இதனால் இன்னும் நம் அண்ணனுக்கு ஐயோ! உதவ வழி இல்லாமல் போய் விட்டதே' என்ற எண்ணம்.

இப்படிக் கும்பகர்ணன் எண்ணமிடுகிறான். இரத்தம் இன்னும் அங்கங்கே உறைந்து போய் விடாமல் பெருகி வெள்ளமிடுகிறது. இரத்த ஆற்றின் அலைகள் முறிந்த தேர்களையும், இறந்த யானை குதிரைகளையும், வானர ராட்சஸப் பிணங்களையும் பட்சபாதமில்லாமல் ஒருங்கே உருட்டி இழுக்கின்றன.

இந்தப் படுகளச் சிறப்பைக் கும்பகர்ணன் கண்கள் பார்க்கின்றன. உள்ளத்திலோ அமைதியாக எண்ண அலைகள். 'மலையோ, மலை போன்ற யானையோ, இப்படி விழுந்து கிடக்கிறது!' என்று கண்டவர் திகைக்கக் கிடக்கிறான்.

அமைதியும் அழகும்

ஓடிக்கொண்டிருக்கும் இரத்த வெள்ளத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் கண்கள், எதிரே வந்து நிற்கும் ராமனைக் கூட உடனே பார்த்துவிட வில்லை. எனினும் எத்தகைய சௌந்தரியம் கண்ணெதிரே நிற்கிறது; கண் நிறைந்து நிற்கிறது.

போரிடும் போது பாணங்களைப் பிரயோகிப்பதில் பயங்கரமாக ஈடுபட்டிருந்த வீரத் தோள்கள் இப்போது எவ்வளவு அமைதியாய், எவ்வளவு அழகாய்க் காட்சி யளிக்கின்றன! இந்தச் சுந்தரத் தோளுக்கு அந்தக் கொடிய வில்லும் இப்போது ஓர் ஆயுதமாகவா தோன்றுகிறது! ஓர் ஆபரணம் அது!

இத்தகைய மகா சௌந்தரியம் வெறியும் பாசமும் கொண்டிருந்த ராட்சஸக் கண்களைத் தன்பால் வசீகரித்து இழுத்துக் கொள்கிறது. இந்த முகத்தாமரைக்கு வண்டாகின்றன கண்ணும் மனமும்!

தன்னோடு ஏதோ யோகக்ஷேமம் வினவத் துடிப்பது போலக் காண்கிறது பவள வாய். 'உனக்கு நான் என்ன செய்ய வேணும்! உன் கடைசி விருப்பத்தை நிறைவேற்றக் காத்திருக்கிறேனே!' என்று சொல்லாமல் சொல்லி விடுகின்றன கண்ணும் முகமும். இதயம் இதயத்தைத் தொட்டுப் பேசும்போது வாய் குறுக்கிடுவதேன்!

'வீரா, உன் தைரிய சாகஸப் பெருஞ் செயல்களை மெச்சுகிறேன்; உன் இறுதி விருப்பத்தைப் பூர்த்தி செய்வேன்!' என்று ராமன் வாய் திறந்து சொல்லவில்லை. இருந்தாலும், இந்த வீர உள்ளம் சீறி மறுத்திருக்கும். ஸத்திய சௌந்தரியத்தின் மோன வாக்கையோ கும்பகர்ண உள்ளமும் கடந்து செல்ல முயலவில்லை.

ஒரு நாடகக் காட்சி

கும்பகர்ணன் வாய்விட்டு மனம் விட்டுப் பேசத் தொடங்குகிறான். முதல் முதல் ஒரே வேண்டுகோள் செய்து கொள்ள விரும்புகிறது உள்ளம். தனக்காக அல்ல; விபீஷணனுக்காகத் தான்.

கடைசியாகத் தனக்காகவும் ஒரு வேண்டுகோள் செய்து கொள்கிறான். என்ன அதிசய வேண்டுகோள்! எவ்வளவு அதிசயமாய்ப் பூர்த்தியாகப் போகிறது!

இரத்த ஆற்றங் கரையில் மத யானை போல விழுந்து கிடக்கும் ராட்சஸனையும், இவனை முகம் நோக்கும் சுந்தரத் தோள்களையும் இப்போது இந்தக் கவிதைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வோம்!

> சிந்துரச்செம் பசுங்குருதி
> திசைகள்தொறும் சிறைஆறா,
> எந்திரத்தேர், கரிபரிஆள்
> ஈர்த்தோடப் பார்த்திருந்த
> கந்தரப்பொற் கிரிஆண்மைக்
> களிற்றனையான், கண் நின்ற
> சுந்தரப்பொற் றோளானை
> முகநோக்கி இவைசொன்னான்.

[சிந்துரக் செம்பசுங்குருதி – சிந்துரப் பொடி போல் செந்நிறமுள்ள புதிய இரத்தம். சிறை ஆறு – அங்கும் இங்கும் அணைகளால் தடுக்கப்பட்டுச் செல்லும் ஆறு. ஆறா – ஆறாக. எந்திரத் தேர் – எந்திரம் அமைந்த தேர். கரி– யானை. பரி – குதிரை, ஆள் – காலாள். ஈர்த்து – இழுத்து. கந்தரப் பொற்கிரி – குகையைக் கொண்ட அழகிய பொன் மலையையும். ஆண்மைக்களிறு அனையான் – வீரமுள்ள யானையையும் ஒத்தவனை கும்பகர்ணன்]

* * *

ஜெர்மன் ரஸாயன சாஸ்திரி ஒருவன் வெடி மருந்து போன்ற சில ரஸா

யனப் பொருள்களை ஆராய்ச்சி செய்யும் போது தன் ஒரு கையையும் காலையும் இழந்து விட்டான். உணர்வு பெற்றதும் அவன் சொன்ன முதல் வார்த்தை இது: 'இன்னும் ஒரு கையும் ஒரு காலும் இருக்கின்றனவே ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கு! இதற்காகக் கடவுளே, உமக்கு வந்தனம்!'

இதே மனப்போக்கில் இந்தக் கும்பகர்ணனும் ராவணனுக்காக ஒரு கை இழந்தான்; இரு கைகளும் இழந்தான்; கால்களும் இழந்தான். ஏன், போரிலே மூக்குடன் காதுகளையும் இழந்து விட்டான்.

'இன்னும் என் அண்ணனுக்காகத் தியாகம் செய்ய வழி தெரியவில்லையே' என்று எண்ணி ஏங்கியிருந்தான். இவ்வளவு தியாகத்திற்கும் உடன் பிறப்பு என்ற பாசம்தான் காரணம்.

இதே பாசம்தான், விபீஷணனையும் நேசிக்கிறது; விபீஷணனுடைய தர்ம லட்சியத்தைக் கூடப் போற்றிப் பாராட்டச் செய்கிறது. ராவணனைக் காப்பாற்றத் தன் உயிரையும் கொடுக்கத் துணிந்த கும்பகர்ணன், தன் மரணத் தறுவாயில் விபீஷணனையும் காப்பாற்ற ஆசைப்படுகிறான்.

ஆனால் உள்ள நிலைமை என்ன! ராவண விபீஷணர்களில் ஒருவன் அழிந்தால் மற்றவன் பிழைத்திருக்கக் கூடும்! கும்பகர்ணனுடைய சகோதர பாசமோ 'இருவரும் பிழைத்திருக்க வேணும்' என்று ஆசைப்பட்டது.

இந்தச் சகோதர பாசத்தில் சகோதரி சூர்ப்பணகைக்கும் ஒரு விசேஷ இடம் உண்டு. ராவணனைக் குறித்தாவது 'தரும விரோதி இவன்' என்ற எண்ணம் உண்டு. சூர்ப்பணகையைக் குறித்தோ 'நிரபராதி;- குற்றம் செய்திருக்கவே முடியாது' என்ற பரிபூர்ண நம்பிக்கைதான் கும்பகர்ணனுக்கு உண்டு.

விபீஷணனே ராவணனையாவது காப்பாற்ற முடியுமா என்று முயன்று பார்த்தான். சூர்ப்பணகை விஷயத்திலோ, தலையிட்டு முயன்றதாகவே தெரியவில்லை.

'திருத்தவே முடியாத பாதகி, வஞ்சகி, பழிக்குப் பழி வாங்கும் சுபாவம் உள்ளவள்' என்ற எண்ணமே விபீஷணனுக்கு இருந்திருக்க வேண்டும் என்பதற்கு யுத்த காண்டத்தின் இறுதியில் ஒரு சான்றும் உண்டு.

இப்படிப்பட்ட சூர்ப்பணகையை,

> பெய் தவத்தின் ஓர்
> பெண்கொடி

என்றும், கற்பரசி என்றும் கும்பகர்ணன் நம்புகிறானென்றால், இவனது சகோதர பாசத்தின் அகலமும் ஆழமும் எவ்வளவு அதிசயமானவை!

சகோதர பாசம் என்ற சஞ்சீவியைக் கொண்டு முரண்பாடுகளையும் முரண்டுகளையும் சமாளித்துச் சமரசப்படுத்த முயல்கிறது கும்பகர்ணன் உள்ளம். அறப்பெருந் துணைவனான ராமனே வெற்றி பெறப் போகிறான் என்று கருதுகிற கும்பகர்ணனே, ராம லட்சுமணர்களையும் கொன்று தீர்த்துவிடலாம் என்று கூடக் கருதினானல்லவா!

விபீஷண பாசத்தால் ராமனது தரும சொரூபத்தையும், தெய்வத் தன்மையையும் கூட ஒருவாறு உணர்ந்து கொள்ள முடிகிறது கும்பகர்ணனுக்கு. ராவண பாசத்தால் ராமனை நோக்கி, 'உன்னைக் கொன்று என் அண்ணனுடைய மன நோயைப் போக்குவேன்' என்று கூடக் கூசாது துணிந்து பேசவும் முடிகிறது.

கைகால்களை இழந்து செயல் துறந்து கிடக்கும் நிலையில் சகோதரபாசம் ஒன்றே இவன் இதயம் முழுமையும் ஆட்கொண்டிருக்கிறது. இது இப்போது ராவணனைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற ஏக்கத்துடன், விபீஷணனை ராவண கோபத்திலிருந்து காப்பாற்றவும் ஒரு வழி கண்டு பிடிக்கிறது.

தன் கண்ணெதிரே – ஏன், கண்ணுக்கு உள்ளும் புறமுமாக – ராம சௌந்தரியம் பொங்கி நிற்பதைக் கண்டதும், விபீஷண பாசம் மேலோங்கி, 'இந்த ராமன்தான் ராவண கோபத்திலிருந்து விபீஷணத் தம்பியைக் காப்பாற்ற முடியும்' என்ற தீர்மானத்தை எழுப்பி விடுகிறது.

விபீஷணனுக்காக ராவணனைக் கொல்லப் போகிற ராமனைப் புகழ்ந்து பேசவும் தயங்கவில்லை இந்தக் கும்பகர்ணன் உள்ளம்.

ராமனைக் கொண்டோ, வேறு விதமாகவோ, இனி ராவணனைக் காப்பாற்றவே முடியாது. மையல் நோய் கொண்டு செத்தவன் தான் அவன். தான் போகிற போக்கில் விபீஷணனையும் முடித்து விடப் பின்வாங்க மாட்டானே!


அந்தப் பேராபத்திலிருந்து விபீஷணனைக் காப்பாற்றத்தான் வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்து விடுகிறான் கும்பகர்ணன்.

"கும்பிட்டு வாழ்கிலேன் யான்' என்ற கொள்கையுடன் கூடிய உள்ளம், விபீஷண பாசத்தால் விபீஷணனைக் காப்பாற்றுவதற்காக ராமனைப் பணிந்து வேண்டிக் கொள்ளவும் சித்தமாகி விடுகிறது!

காந்தியடிகள் லட்சிய சத்தியாக்கிரகியாக ஒரு சரித்திர புருஷனையும் காட்டாமல் புராண உலகத்திலிருந்து பிரகலாதனையே முன்மாதிரியாகக் காட்டினர். அப்படியே ஜீவகாருண்யம் என்ற அருளொழுக்கத்திற்கு முன்மாதிரியாகக் காட்டத் தக்க லட்சிய புருஷன் சிபிச் சக்கரவர்த்தியே.

கதையும் வளர்ச்சியும்

தன்னை அடைக்கலமாக அடைந்த ஒரு புருவுக்காகத் தன்னுடைய சரீரத்திலிருந்து தசையை அரிந்து சொடுத்த சிபி, கடைசியாகத் தானே தராசுத் தட்டில் ஏறி நின்றுன் என்ற கதை மிகவும் பிரசித்தமானது.



பி.ஸ்ரீ

இக்கதையைப் பொது மக்களின் மனோபாவம் எப்படியெல்லாம் அனுபவித்திருக்கிறது! கூட்டியும் பெருக்கியும் லட்சியத்தை மேலும் மேலும் உயர்த்திப் பார்த்தும் பரவசமடைந்திருக்கிறது மனோபாவம்.

உடம்பின் வலது பக்கத்திலிருந்து சதையை அரிந்து கொடுத்துக் கொண்டிருக்கிறுன் சிபி மன்னன். தான் துரத்தி வந்த புருவின் எடைக்கு இன்னும் சரியாகச் சதை கொடுக்கவில்லையே என்று சொல்லிக் கொண்டிருக்கிறுன் எதிரே நிற்பவன்.

சிபியோ மேலும் மேலும் வலது புறச் சதையை அறுத்துக் கொடுக்கிறுன். 'நிறுத்து, நிறுத்து; இந்த வியாபாரம் உதவாது' என்று, வந்தவன் கூச்சலிடுகிறுன். ஏன்!



'நீ அழுகிறாய்; உன் கண்ணில் நீர் வந்து விட்டது. இனி, நான் உன் சதையைப் பெற்றுக் கொள்ளமாட்டேன்' என்று வாதாடுகிறான் அவன்.

அப்போது சிபி சொல்லுகிறான்: 'நன்றாகப் பார். எந்தக் கண் அழுகிறது? எதற்காக? தியாகம் செய்யும் பேறு வலது பக்கத்திற்கல்லவா கிடைத்திருக்கிறது என்று இடது பக்கம் அழுகிறது, பார்!'

இப்படிச் சிபிச் சக்ரவர்த்தியின் கதை மனோபாவத்தை வளர்த்து விட்டு, அந்த மனோபாவத்தால் தானும் ஒரு புதிய அழகும் புதை பொருளும் பெற்று வளர்ந்தோங்கி வந்திருக்கிறது. சிபியின் புகழ் – மகுடம் விண்ணை முட்டி நிமிர்ந்திருக்கிறது.

சிபியின் இந்த அதிக கதையைச் சகோதரி நிவேதிதா (விவேகானந்த சுவாமிகளின் அமெரிக்க மாணவி) குதூகலமாய்க் குறிப்பிட்டு, இந்து தர்மத்தின் ஓங்கி வளரும் உயிர்ச் சக்தியைச் சுட்டிக் காட்டுகிறாள்.

இக் கதையைக் கம்பனும் தன் காவியப் பூங்கோயிலை அழகு செய்யும் ஓர் அருமையான இரத்தினமாகப் பதித்துக் கொள்கிறான்.

கவிஞன் உபயோகித்துக் கொள்ளும் ஒரு மாமணி இக் கதை என்றால் போதாது: இதை ஒரு 'கோமணி'யாக (இரத்தினங்களின் சக்கரவர்த்தியாக)ப் பதித்துக் காட்டுகிறது கவியுள்ளம்.

தன் ஒரு கைக்கு இரு கை தாழக் கொடுத்த வள்ளலாகச் சிபியைக் கம்பன் குறிப்பிடவில்லை. புறாவுக்காகத் தானே தராசில் ஏறி நின்றவனைத் 'துலை புக்க (தராசு புகுந்த) பெருந்தகை' யென்றும், 'பெரியோன்' என்றும், அந்த வழியில் வந்த பெருமை ராமனுக்கும் உண்டு என்றும் கம்பன் சொல்லுகிறான்.

பிறந்த நாள் தொடங்கி மக்கள் சிபியை நினைத்துக் கொண்டிருந்தார்கள், மறந்து விடவே யில்லை யென்கிறான். 'அறிவு பிறந்த நாள் தொடங்கி' என்று சொல்

வில்லை. எனவே, குழந்தையைத் தாலாட்டும்போதும், தாய் சிபிகதையைப் பாட்டாக இசைத்துக் குழந்தையின் உள் மனத்துள் அருளொழுக்கத்தின் விதையை விதைத்து வந்தாள் என ஊகிக்கலாம். இது ராம ராஜ்யமாகிய கோசல நாட்டின் நிலை.

ராவண ராஜ்யத்திலும் கூடச் சிபிச் சக்கரவர்த்தியின் புகழ் பரவியிருந்ததென்றால், அது ஓர் அதிசயமல்லவா! கும்பகர்ணனுடைய வீர தர்மமும் சிபி மன்னனின் தியாகத்தை அறிந்து பாராட்டியதாம்.

யானைப்படையும் வாட்படையும் உடையவன் சிபிச் சக்கரவர்த்தி என்கிறான் கும்பகர்ணன். இந்த வாள் வீரமும் தோள் வீரமும் தியாக வீரமாக முதிர்ந்து கனிந்து, கும்பகர்ணனுள்ளத்தையும் வசிகரித்து விட்டன.

கும்பகர்ணன் சிபியைக் குறித்து அபிப்பிராயம் வெளியிடுவதற்கு ஒரு வாய்ப்பைக் கவிஞன் எங்கே, எப்படி அமைத்துக் கொள்கிறான்!

புக்கடைந்த புற(வு)ஒன்றின்
பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடம்கார் மதயானை
வாள்வேந்தன் வழிவந்தீர்!

[புக்கு அடைந்த – வந்து அடைக்கலமாக அடைந்த. புறவு ஒன்றின் பொருட்டாக – ஒரு புறாவின் பொருட்டினால். மைக்கடம் கார் மதயானை – கறுத்த மத நீரை மேகம் போல் சொரிகிற மதயானைகள். வழி வந்தீர் – வம்சத்தில் பிறந்தவரே.]

என்று கும்பகர்ணன் ராமனை அழைக்கும்போது, ராமனே லட்சியமாகக் கொண்டு பாராட்டியிருக்கும் சிபிச் சக்கரவர்த்தியின் பிரஸ்தாபம் பொருத்தமாக வருகிறது.

"உம்மை யடைந்த விபீஷணனுடைய உயிரைப் பாதுகாக்க வேண்டும்" என்று வேண்டிக் கொள்ளும் கும்பகர்ணன், 'தன்னை அடைந்த ஒரு புறாவுக்காகத் தராசு புகுந்த வீரவேந்தனின் வழி வந்தவரே!' என்று அழைப்பது எவ்வளவு பொருத்தமானது!

நீதியும் சாதியும்

ராட்சஸ உறவை விட்டொழித்து ராமனுடனே உறவு கொள்ளத் துணிந்த விபீஷணன் செய்திருக்கும் தியாக ஸாகஸத்தை நெஞ்சார வாயாரப் பாராட்டிப் பேசுகிறான் கும்பகர்ணன் ராமனிடம். இந்தப் பாராட்டுரையில் பொதிந்து கிடக்கும் பெருங் கொள்கை ஊன்றி நோக்கத் தக்கது.

இதற்கும் சிபியின் தியாகக் கதை ஒரு பொருத்தமான தோரண மணிவாசலாகக் காண்கிறது.

கும்பகர்ணனுக்குக் 'குலத்து மானம்' (ராட்சஸ ஜாதி அபிமானம்) அதிகம். அதுவே அவனது நோய் எனக் கருதினான் விபீஷணன். அந்த ஜாதி அபிமானம் விபீஷணனுக்குத் துளியும் இல்லை, இது இவன் சிறப்பியல்பு என்று ராமனிடம் தெரிவிக்கிறான் கும்பகர்ணன்.

சாதிச் சிறுநெறியில் நில்லாது நீதி தர்மம் என்ற பெருவழி பிடித்துச் செல்லுகிறவன் விபீஷணன். கும்பகர்ணனது இதயத்திலிருந்து வெளிவரும் இந்தக் குண சித்திரத்தைப் பாருங்கள்;

நீதியால் வந்ததொரு
நெடுந்தரும நெறி அல்லால்,
சாதியால் வந்தசிறு
நெறிஅறியான் என்தம்பி;
ஆதியாய்! உனைஅடைந்தான்
அரசர்உருக் கொண்டமைந்த
வேதியா! இன்னம் உனக்(கு)
அடைக்கலம்யான் வேண்டி
னேன்.

[ஆதியாய் – ஆதியானவனே.]

விபீஷண குண சித்திரத்தைப் புலப்படுத்தும் இக் கவிச் சித்திரம், இன்றும் நமக்குப் பயன்படத் தக்க பெருநெறியைச் சுட்டிக் காட்டுகிறதல்லவா! ராமனை 'அரசர் உருக் கொண்டமைந்த வேதியா!' என்று அழைப்பதைக் கேளுங்கள்.

பாலகாண்டத்தின் இறுதியில் 'பரசுராமப் படல'த்தில் வரும் இப் பாட்டு ஒப்பு நோக்கத் தக்கது.

நீதியாய்! முனிந்திடேல்;
நீ இங்கு: யாவர்க்கும்
ஆதியான்; அறிந்தனன்,
அலங்கல் நேமியாய்!
வேதியா!...

இந்தப் பாட்டைத் தழுவியே 'நீதியால் வந்ததொரு' என்று தொடங்கும் யுத்த காண்டப் பாட்டும் அமைந்திருக்கிறது என்பது நிச்சயம்.

பாலகாண்டத்துப் பாட்டிலும் ராமனை 'வேதியா!' என்கிறான் பரசுராமன். கும்பகர்ணனோ ராமனை 'அரசர் உருக் கொண்டமைந்த வேதியா!' என்று

அழைக்கிறான். இது பரசுராமனது கருத்தை மேலும் தெளிவு படுத்துகிறது.

இந்த இரண்டு பாடல்களும் சாதி பற்றிய கம்பனது கொள்கையை நன்கு வெளியிடுகின்றன எனலாம்.

ராட்சஸ ஜாதி கர்வம் பெரிதும் கொண்டிருந்த கும்பகர்ணன், அத்தகைய ஜாதி கர்வம் சிறிதும் இல்லாத விபீஷணனை உள்ளவாறு தெரிந்து கொண்டிருப்பது ஓர் அதிசயமல்லவா! அன்பின் மகிமையால், அனுதாபத்தால் விளைந்த அற்புதம் இது.

கும்பகர்ண சிகரம்

'கும்பிட்டு வாழ்கிலேன் யான்' என்று விபீஷணனிடம் மார் தட்டியவன், அதே விபீஷணனுக்காக இப்போது சத்துருவான ராமனிடத்திலேயே 'அவனுக்காக நானும் சரணாகதி செய்யத் தயார்!' என்கிறான். சகோதர பாசத்தின் வெற்றிச்சிகரம் இது.

தனக்காகக் கும்பிடமாட்டான்; தம்பிக்காகக் கும்பிடு போடுகிறானும். கும்பகர்ணனது அதிசயமான குணசித்திரத்தின் அதிசயமான பகுதி இது.

தம்பியென்று கொஞ்சமும் இரங்காது கொன்று விடுவான் விபீஷணனை ராவணன்; ஆகவே விபீஷணனை ராமன் தன் பக்கத்திலாவது, லட்சுமணன் பக்கத்திலாவது, அநுமன் பக்கத்திலாவது எப்போதும் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது, கும்பகர்ணன் கும்பிட்டு வேண்டிக் கொள்வது.

உம்பியைத்தான், உன்னைத்தான்,
அநுமனைத்தான், ஒருபொழுதும்
எம்பி பிரியானாக
அருளுதி

என்பது இவன் வேண்டுகோள்.

ஜாக்கிரதையாகக் காப்பாற்றக் கூடிய மூவருள் லட்சுமணனுக்குத் தலைமை ஸ்தானம் கிடைத்திருப்பது எவ்வளவு பொருத்தமானது! லட்சுமணனுடைய அதிஜாக்கிரதையான விழிப்பு நிலைக்கு இந்தப் போரிலே அவனைத் தெரிந்து கொண்டிருக்கும் இந்தக் கும்பகர்ணன் எத்தகைய சாட்சி, பாருங்கள்!

இந்த மலையில் இரண்டாவது சிகரம்

கும்பிட்டு வாழத் தெரியாதவன், விபீஷணனைக் காப்பாற்ற ஒரு கும்பிடு போடவும் தெரிந்து கொண்டவன், இப்போது அந்தத் தம்பிக்காக மட்டும் அல்ல, தனக்காக ஒரு வரம் வேண்டவும் தயாராகி விடுகிறான்.

'இது நின்னை வேண்டுகின்ற பொருள்' என்கிறானே, அந்தப் பொருள்தான் எது? தனக்குக் கதி தேடுகிறானா?

'உன் மக்களும், என் மக்களும், ராவணன் மக்களும் கூடத் தலையோடு திரியக் கூடிய காரியத்தைப் பார்' என்றானே விபீஷணன், அதை அனுசரித்துத் தன் மக்களுக்காவது ஒரு வசதி தேடப் போகிறானா?

அப்படி யொன்றும் இல்லையென்றால், இவன் இப்போது ராமனை வேண்டுகின்ற பொருள்தான் எது?

'மூக்கிலாமுகம் என்று
முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார்; நோக்காமை
நுன் கணையால் என்கழுத்தை
நீக்குவாய்; நீக்கியபின்,
நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய்; இது நின்னை
வேண்டுகின்ற பொருள்'
என்றான்.

[நோக்காமை — நோக்காதபடி. நுன் கணையால் — உன் அம்பினால்.]

இந்தப் பிரார்த்தனையிலும் 'குலத்து மானம்' என்ற கும்பகர்ண குணாதிசயம் புலனாகிறது. கும்பகர்ணனது வீர தர்ம உணர்ச்சியும் நன்கு புலனாகிறது.

பொருளைக் குறித்து 'உயில்' என்ற மரண சாஸனம் எழுதும் போது விவரங்களைக் குறிப்பிடுவது போல் இந்த இறுதிப் பிரார்த்தனையிலும்,

நீக்குவாய்; நீக்கியபின்
நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய்......

என்ற விவரங்கள் காணப்படுகின்றன.

ராமன் அப்படியே செய்து விடுகிறான், தன்னுடைய இரண்டு பிரார்த்தனைகளையும் ராமனால் — ராமனால் தான் — நிறைவேற்ற முடியும் என்பதைக் கும்பகர்ணன் அறிந்திருக்கிறான்.

ஆடினார் வானவர்கள்,
அரமகளிர்; அமுத இசை
பாடினார்; மாதவரும்
வேதியரும் பயம்தீர்ந்தார்.

ஆதிக்க மாட்சியும் அழகு மாட்சியும்

கும்பகர்ணன் போருக்குப் புறப்பட்டதும் வெற்றி கிடைத்து விட்டதாகவே நினைவு ராவணனுக்கு. மலை போன்ற தம்பி மேனியைக் கண்டதும் எதிரிகள் ஓடி ஒளிப்பர் என்றான் மகோதரன்.

மகோதர மேதா விலாஸம்

ராவணன் மகோதரனை நோக்கி, 'இனி நான் சீதையைப் பெற்று வாழும் வழியையும் நீ தான் காட்டவேணும்' என்று கேட்டுக் கொள்கிறான். போர்க் கவலை ஒதுங்கியதும் காதல் கவலைப் படுத்துகிறது.

நினைவு ஒரு பெருஞ் சுமையைத் தள்ளி விட்டு இளைப்பாறி இன்புறவோம் என்கிறது. போர்க் கவலையி லிருந்து விடுதலை தந்த மேதாவி காதல் வெற்றிக்கும் ஒரு சுலபமான வழியைக் காட்டமாட்டானா!

தோள்கள் 'இருபதா, இன்னும் எத்தனையோ!' என்று சொல்லும்படி பூரிக்கின்றன. கொலு மண்டபத்திற்கு வந்து சேர்ந்த மகோதரன் முகத்தைக் குளிர நோக்கியதும், 'இவன் ஒருவன் உலகத்தில் இருக்கும் போது எனக்கும் உண்டோ குறை!' என்று பூரித்துப் போகிறது உள்ளம்..

மகோதரா, ஸீதையை அடையவும் ஒரு பாதை காட்டு; காட்டி என் உயிரை நீ எனக்குத் தரவேணும்; இன்று இந்த உயிரை எனக்கு இனிமையாக்கித் தர வேணும்' என்று கெஞ்சுகின்றன, கொஞ்சுகின்றன பத்து வாய்களும்.

மகோதர மேதையில் ராவணன் வசீகரிக்கப் பெறுவதுடன், ஒரு மகா நாடகத்திற்குத் திரை விலகுகிறது.

'மாமிச பர்வத' மாகிய கும்பகர்ணன் போர்க் களத்திலே விளைத்த வீரத்தைப் 'பேரெழில் ஆண்மை' (மிகவும் அழகிய வீர பராக்கிரமம்) என்று காட்டுகிறது கவிக் கூற்று;—ஆம், அந்த ஆண்மையை ராவணன் மையலில் தாழ்ந்து இப்போது செய்யப் போகும் சிறுமையுடன் ஒப்பிடும்போது.

ராவணன் உல்லாசமாகக் கொலுவிருக்கிறான். மகோதரனும் உல்லாசமாக வந்து நிற்கிறான். இருவரும் சல்லாபிக்கிறார்கள்.

'சீதையை நீ அடைவதா!—அவளல்லவா இனி உன்னை வந்து அடைய

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ



வேணும்! அவளே உன்னை வலுவில் வந்து மணந்து கொள்ளப் போகிறாள் பார்' என்கிறான் மகோதரன். ராவணன் எதிர்பார்த்ததற்கும் மேலாக அதி சுலபமான ஒரு வழியைக் காட்டவும் போகிறான் மதி மந்திரி.

ராவணனுள்ளம் துரிதப்படுகிறது. அதற்கும் மேலாகத் துரிதமாய் வேலை செய்கிறது மகோதரனுள்ளம். 'அவளே வலுவில் மணமாலையும் கையுமாக வருவது தான் எப்படியோ!' என்று ஆத்திரப்படும் உள்ளம் அந்தக் கேள்வியைப்

போடுவதற்கு முன்பே, அதற்கு விடை சொல்லி விடுகிறது மந்திரியின் மதி.

'ஜனக மகாராஜாவைக் கட்டிக் கொண்டு வந்து சீதை கண்ணில் காட்ட வேண்டியது தான்; ஜானகியின் மறு மனம் நிச்சயமாகிவிடும்: அவளும் அப்பனும் நிச்சயித்து விடுவார்கள்!' என்பது மகோதரன் சொல்லும் மகத்தான ஆலோசனை.

ஆனால் அது அவ்வளவு சுலபமான காரியமா? தொலைவிலுள்ள மிதிலைக்குப் போக வேணுமே; படை கொண்டு போக வேணுமே! இப்போது இங்கேயே போர் நடக்க அது சாத்தியமா? ஜனகனைப் பிடித்துக் கட்டுவதும் கொணர்வதும் தான் எளிதா? இத்தகைய சிந்தனைகள் ராவணனது காமாந்தகார உள்



ளத்திலும் சுர (ஜ்வர) வேகத்தில் ஓடக் கூடுமே.

இந்தக் கேட்காத கேள்விக்கும் பதில் வந்து விடுகிறது சன்னி (ஜன்னி) வேகத் திலே. 'நமது மருத்தப் பயலுக்கு வேஷம் போட்டால் போதுமே!' என்கிறான் மகோதரன் சிரிக்காமலே.

ராவணன் பளிச்சென்று சிங்காசனத் திலிருந்து ஒரு குதி குதித்து எழுகிறான்: மார்பு இறுகத் தழுவிக் கொள்கிறான் மகோதர மேதையை.

'அன்ப, அந்த ஆசாமியை அங்கே ஆஜர் செய்' என்று சொல்லி விட்டு, அவசர அவசரமாய்ப் போகிறான் அசோக வனிகையை (சீதை சிறையிருக்கும் சோலையை) நோக்கி.

நடையைப் படம் பிடித்தது (இரண்டு படங்கள்)

போகிறானா, நடை போடுகிறானா! அந்தக் குதூகல — கம்பீர — உல்லாஸ நடையைத்தான் என்னென்பது!

அன்று நடந்தது இன்றும் கிடக்கிறது இந்தப் பாட்டிலே:

மின் ஒளிர் மகுட
 கோடி இளவெயில்
 எறித்து வீசத்
துன்னிருள் இரிந்து
 தோற்ப, சுடர்மணித்
 தோளில் தோன்றும்
பொன்னரி மாலை
 நீல மலையின் விழ்
 அருவி பொற்ப,
நன்னெடுங் களிமால்
 யானை நாணுற
 நடந்து வந்தான்.

[மின் ஒளிர் — மின் வெட்டுவது போல் ஒளி விளங்குகிற. மகுட கோடி — கிரீடங்களின் வரிசை. துன் இருள் — நெருங்கிய இருட்டு. இரிந்து தோற்ப — தோற்று நிலை கெட்டு ஓட. சுடர்மணித் தோளில் — சுடர் வீசும் இரத்தின ஆபரணங்களை அணிந்த தோளின் மீது. பொன் அரிமாலை — பூமாலையைப் போலப் பொன்னால் செய்த ஆபரணம். அருவி பொற்ப — நீரருவிப்பால் இனிது விளங்க. நன்னெடுங் களிமால் யானை — அழகிய உயர்ந்த மத மயக்கம் கொண்ட யானை.]

அந்த இரவிலே தீபங்களின் வெளிச்சத்திலே மின்வெட்டுவது போல் வெட்டி விளங்கும் கிரீட வரிசைகள், ராவணனது சர்வாதிகார வெறிச் செயல்களை வரிசையாக்கி 'அவற்றுக்கும் ஒரு மகுடம் தேடப் பார்க்கிறானே' என்று நம்மை நினைத்துப் பார்க்கச் செய்கிறது.

மின்னல் — யோசனை மின்னல் வேகத்தில் நிறைவேறப் பார்த்து மின்னலைப் போல் அப்படியே அந்தகாரத்தில் மறைந்து போய், இருட்டு முன்னிலும் பயங்கரமானதைப் பார்க்கப்போகிறோம்.

இளவெயிலில் மலையருவி பொன்னிறமாகத் தோன்றுகிறதல்லவா? அந்தப் பொலிவை, வசீகரத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது,

பொன்னரி மாலை
 நீல மலையின்விழ்
 அருவி

என்ற சப்த சித்திரம்.

மத யானையும் வெட்க மடையும்படி வருகின்ற அதிசய கம்பீரத்தை வெளியிடும் கடைசி அடியில், காட்டிலே தன்னிச்சை கொண்டு திரியும் மத யானைகளையும் பார்க்கிறோம்; ராவணனுடைய மதோன்மத்த நடையையும் காண்கிறோம்.

ராவணனுடைய கம்பீர நடையின் வேறொரு சித்திரம் சுந்தர காண்டத்தில் காணப்படுகிறது.

உலகத்தை யெல்லாம் ஒருவனே அடைத்துக்கொண்டு வருவது போன்ற கவி கதி அது:

சிகரவண் குடுமி
 நெடுவரை எவையும்
 ஒருவழி திரண்டன
 சிவண,
மகரிகை வயிர
 குண்டலம் அலம்பு
 தின்திறல் தோள்புடை
 வயங்க,
சகரவேலையின் நீர்
 தழுவிய கதிரின்
 தலைதொறும் தலைதொறும்
 தயங்கும்
வகையபொன் மகுடம்
 இளவெயில் எறிப்பக்
 கங்குலும் பகல்பட
 வந்தான்

[நெடுவரை — பெரிய மலைகள். ஒரு வழி திரண்டன சிவண — ஒரே இடத்தில் திரண்டு காணப்படுவன போல. சகர வேலையின் நீர் தழுவிய கதிரின் — காலை வேளையில் நீலக் கடலைத் தழுவிக் கொள்

ளும் இளஞ் சூரியனது பொற் கிரணங் கள் போல. கங்குல் – இரவு.]

இந்தப் பாட்டை நினைவூட்டுகிறது 'மின்னொளிர் மகுட கோடி' என்று தொடங்கும் நடை வருணனைப் பாட்டு. ஆனால், சுந்தர காண்டத்திலே சுந்தர மான சப்த ஜாலங்களை அடுக்கி அடுக்கி உருவாக்கப்படும் சித்திரம் இங்கே அதி சுலபமாக – மகோதரன் மூளையில் உதிக் கும் ஆலோசனைகள் போல் அவ்வளவு சுலபமாக – உருவாகி விடுகிறது.

இந்த இரண்டு பாடல்களையும் ஓதி ஓதி உணர உணர, நாம் பிரதாபலங்கேச்வர னின் படாடோப நடையைப் பிரத்தி யட்சமாகப் பார்த்துப் பார்த்து அனு பவிக்கிறோம்.

தீபங்களின் ஒளியில் கண்ட சௌந்தரிய வெள்ளம்

தெய்வப் பெண்கள் தீபங்களைத் தாங்கி வருகிறார்கள்.

விளக்(கு) ஒரு விளக்கம்
தாங்கி

வருவது போல வருகிறாளாம் ஒவ்வொரு தெய்வப் பெண்ணும்.

இவ்வளவு கோலாகலமாக ராவணன் சீதையை வந்து பார்க்கிறான். 'அவளே வலுவில் வந்து விடுவாள், மணம் பேசு வதற்கு!' என்று மகோதரன் கூற்றை இருந்த இடத்திலிருந்தே சோதித்துப் பார்த்திருக்கலாம். ஆனால் அதற்குரிய பொறுமை இருக்க முடியுமா, காதலில் மூங்கி முழுகிறவனுக்கு? காதல்–அலைகள் தள்ளிக் கொண்டு வந்து விடுகின்றன!

சீதையின் காட்சிக்கு முன் ராவணன் மாட்சி அப்படியே வீழ்ச்சியடைந்து விட்டது போலத் தான் காண்கிறது. அவளைக் கலங்கச் செய்வதற்காக அரக் கன் வந்திருக்கிறான் என்று அறிவிக்கும் இந்தப் பாட்டிலும்:

பண்களால் கிளவி
செய்து, பவளத்தால்
அதர மாக்கி,
பெண்களா னார்க்குள்
நல்ல உறுப்பெலாம்
தெரிய ஈட்டி,
எண்களால் அளவா
மானக் குணம் தொகுத்(து)
இயற்றி னாளைக்
கண்களால் அரக்கன்
கண்டான், அவளையோர்
கலக்கம் காண்பான்.

[பண்களால் கிளவி செய்து–பண்களைக் கொண்டு பேச்சைப் படைத்து. அதரம் – உதடு. தெரிய ஈட்டி – தேர்ந்தெடுத்துச் சம்பாதித்து வைத்துக் கொண்டு. எண் களால் அளவா – கணித சாஸ்திரத்தால் அளந்து சொல்ல முடியாத. மானக் குணம் – பெருங் குணங்களை இயற்றி னாளை – ஒரு மகா கவி கவிதை இயற்று வது போல் படைப்புக் கடவுளால் இயற் றப் பெற்றவளை. ஓர் கலக்கம் காண்பான் – ஒரு பெருங் கலக்கத்தைக் காணச் செய் வதற்காக.]

இப் பாட்டின் முதல் மூன்று அடிகளி லும் சீதையின் அழகு சித்திரிக்கப் படு வது, மூன்றே அடிகளால் உலகம் அளந்த கதையை நினைவூட்டுகிறது.

அந்த மூவடிக்குள்ளே உலகமெல்லாம் ஒடுங்கி அடங்கி விட்டது போல், கவிஞ னின் இந்த மூன்று அடிகளிலும் 'பெண் மையழகு' என்ற உலகம் அடங்கிப் போயிற்றோ என்ற ஒரு பிரமையும் ரஸி கர்களுக்குத் தோன்றுகிறது.

ரூப சௌந்தரியத்தை இரண்டு அடி களால் வருணித்து விட்டு ஓர் அடி சுட்டிக் காட்டுகிறது அளவிட முடியாத குண சௌந்தரியத்தை.

இவ்வளவு பேரழகையும்,

கண்களால் அரக்கன்
கண்டான்

என்கிறது இதே பாட்டு.

'அரக்கன் கண்டான்' என்பதைக் 'கண்களால் அரக்கன் கண்டான்' என்று விரித்துக் கூறுவதில், பெருந் துஷ்டனை ராவணேச்வரன் தன்னுடைய இருபது கண்களிலும் காம வெறி பரவித் தோன்ற அந்தத் தெய்வ அழகை நோக்கினான் என்ற குறிப்பைக் காண்கிறோம்.

கொடுங் கண்களால் விழுங்குவதுபோல் நடுங்க நோக்கியும், குண சௌந்தரி யத்தை உயிர் நிலையாகக் கொண்ட சீதை யின் அழகுச் சித்திரம் அப்படியே மாசு மறுவின்றி ஜொலிக்கப் போகிறது என்ற குறிப்பும் இச் செய்யுளகத்தே காணப்படு கிறது.

ஆடம்பரமாக வந்தான். வான மங்கை யர்களின் அழகு ஜோதிக்கும் தீப ஜோதிக்கும் இடையே வந்து தோன்றி னான். மங்கல பாடகர்கள் வாழ்த்தி மங் களம் பாட வந்தான்.

'அந்த நடைக்கே மூவுலகும் அடிமை யாக வேண்டியது தான்!' என்று தோன் றுமாறு அதிகம்பீர நடை போட்டு வந்

தான். இப்போது நிற்கும் நிலையில்தான் படாடோபத்திற்குப் பஞ்சமா?

எனினும் மிடுக்கும் மாட்சியும் அந்தத் தெய்வ சௌந்தரியத்திற்கு முன் கூசிக் குலைய, ராவணன் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, காவலாளிகளான அரக்கியர் தனக்காகக் கொண்டுவந்து போட்ட ஒரு பொற்பீடத்தில் உட்கார்ந்து கொள்கிறான்.

மிடுக்கையும் மாட்சியையும் பெயரளவிற்கு மீட்டுக் கொண்டவனைப் போல் கம்பீரமாக வீற்றிருக்கிறான்.

வானவர்களையும் தங்கள் உலகத்திலிருந்து அப்புறப்படுத்திய தோள்கள் தொகுதியாகச் சூழ்ந்திருக்கும் போது அந்த வீர மாட்சிக்கு என்ன குறைவு?

காலில் கிடக்கும் வீரக்கழல், கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்கும் அந்த நிலையில், உலகங்களை அடிமைப் படுத்திய ஆதிக்கத்தைச் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறதல்லவா?

அதே ஆதிக்கத்தை வற்புறுத்திக் காட்ட வட்ட வெண்ணிறக் குடையும் பிடிக்கிறார்களாம்; சாமரையும் வீசுகிறார்களாம். இடையில் கட்டிய உடைவாளும் 'வலிமையே உரிமை' என்பதற்கு அறிகுறிதானே?

இப்படிச் சீதைக்கு முன் பீடத்தில் வீற்றிருக்கும் ராவண சித்திரத்தைப் பாருங்கள்:

இட்டதோர் இரண
பீடத்(து) அமரரை
இருக்கை நின்றும்

கட்ட தோள்—கானம்
சுற்றக், கழல் ஒன்று
காலில் கா ண,

வட்டவெண் கவிகை
ஓங்கச், சாமரை
மருங்கு வீசத்,

தொட்டதோர் சுரிகை
யாளன் இருந்தனன்,
இனைய சொன்னான்.

[இரணபீடம் – பொற்பீடம். இருக்கை– இருப்பிடம், கட்ட – அப்பால் படுத்திய தோள் – கானம் – தோள்களின் காடு; தோள்களின் தொகுதி, கவிகை – குடை. மருங்கு – இரு புறத்திலும், தொட்டதோர் – கட்டிய தொரு.]

சிந்தை வலையமாம்

118. பெருந்தன்மையும் பழி சொல்லுதலும்

(பா-நீதி)

ஆடம்பரமாய்ச் செழுமைப்படு போலப் பொய்யுப்படுத்தி விடுகின்றனர். ஆனால் உண்மை நிலைமையால் தழுவிய பா தப பிடிவாத நிலையது.

உண்மை திண்மைப்
பேச்சாக ஆகிறது.

தேவர்களை நம்பித் தொழுததே நாம் கண் நிப்போது வர உண்மை நிலை. கண்டேன் காலபோட்ட வழிக்குழி புரப்பட விருந்தோம் நிலமே, அந்த நிப்பாரும், 'நீதானோ நீதிப்புனோ மிருப்பு' என்று உண்மை நான் மேமட்டுமென்று.

படர்ந்து நிட்டவர்கள் சந்து செய்யமலே போல் மட்டுமாகும். பட்டவன்கொட பழித்தவர்கள்

குடைக் காம்போடு குடைக் காம்பாய்ச் சேர்ந்து விட்டது போல் இருக்குமிடம் தெரியாமலே நிற்கிறார்கள். வெண்சாமரை இரு புறத்திலும் வீசுகிறவர்களும், 'சாமரைகள் தாமே வீசுகின்றனவோ!' என்று நினைக்கும்படி அவ்வளவு தூரம் அடங்கி ஒடுங்கிப் பணி செய்கிறார்கள். இவ்வளவு பணிவும் ராவணனுடைய மிடுக்கை எடுத்துக் காட்டவில்லை.

இடையில் கட்டிய உடைவாளும் மிடுக்கைத் தூக்கிக் காட்டவில்லை. அப்படிக் கூசிக் குலைந்து போயிருக்கிறது அதிகார மாட்சி, தூய பேரழகின் மாட்சிக்கு முன்பு.

இந்த நிலையில் ராவணன் பேச்சு எப்படியிருக்கிறது என்பதை முதல் முதல் தொகுத்துக்கூறிப் பின் விரித்துரைக்கப் போகிறான் கவிஞன்.

சுந்தர காண்டத்திலே (நிந்தனைப்படலத்தில்) எத்தகைய மிடுக்குடன் சீதையை வேண்டிக் கொண்டான்! இப்போது எப்படிச் செருக்குக் குலைந்து வேண்டுகிறான்! இதிலே ஐய ஒருவகைச் 'சிறுமைப் பித்து' வெளிப்படுகிறது எனலாம்.

இந்த வேண்டுகோளின் பீடிகையாக அமைந்திருக்கும் கவி இது:

'என்றுதான் அடிய,
னேனுக்(கு) இரங்குவ(து)?
இந்து என்பான்

என்றுதான் இரவி
யோடும் வேற்றுமை
தெரிவ(து) என்பால்?

என்றுதான் அனங்க
வாளிக்(கு) இலக்கிலா(து)
இருத்தல் ஆவது?—

என்றுதான் உற்ற
தெல்லாம் இயம்புவான்
எடுத்துக் கொண்டான்.

[இந்து—சந்திரன். என்பால்—என்னிடம். அனங்க வாளிக்கு – மன்மதனுடைய அம்புகளுக்கு. இலக்கு இலாது இருத்தல் ஆவது—இலக்கு ஆகாமல் இருக்க முடிவது. உற்றதெல்லாம் – அடைந்த வருத்தங்களையெல்லாம். இயம்புவான் – சொல்லும்படி.]

தான் படுகிற ஹிம்சையை, கொல்லாமல் கொல்லப்படும் இந்தக் கொடுமையை, உயிரோடு வதமாவது போல் காயாக்கினி

யால் அப்படியே தகிக்கப் படுவதையெல்லாம் ராவணன், நெஞ்சிலிருந்து கொட்டி அளக்கிறான் சீதை முன்பு.

சீதையை வஞ்சித்துச் சிறைவைத்தானல்லவா! அதற்கும் முன்னே இதயச் சிறையில் வைத்து விட்டானும், – அதாவது, சூர்ப்பணகை சொல்லக் கேட்டதுமே:

மயிலுடைச் சாய
லாளை வஞ்சியா
முன்னம், நீண்ட

எயிலுடை இலங்கை
நாதன் இதயமாம்
சிறையில் வைத்தான்!

அப்படி இதயச் சிறையில் வைத்ததே ஆபத்தாகி விட்டது என்கிறான், 'உன்னை வஞ்சித்ததாக நினைத்திருந்தேன்; இப்போது என்னை நானே வஞ்சித்துக் கொண்டதாகத் தெரிந்துக் கொண்டேன்' என்று சீதையை நோக்கிச் சொல்லுகிறான்:

வஞ்சனேன்
எனக்கு
நானே!



அமுதம் உண்பதாக எண்ணி நஞ்சை உண்பவர் உண்டா! ராவணனே,

நஞ்சுதோய் அமுதம்
உண்பான் நச்சினேன்

[உண்பான் நச்சினேன் – உண்ண விரும்பினேன்.] என்கிறான்.

சீதையை 'மாதரார் வடிவு கொண்ட நஞ்சுதோய் அமுதம்' என்கிறான்.

கொன்றிடும் என இனிதாய்,
இன்பக்
கொழுங்கனலாய் அனல்—
சுவை அமுதாய்

என்றுவரும் பாரதியாரின் காதல்–வர்ணனையை இப்போது ஞாபகப்படுத்திக் கொண்டால், 'நஞ்சுதோய் அமுதம்' என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

இனி, இந்தப் பாட்டு முழுமையும் பார்த்து, ராவணனது நெஞ்சு படும் பாட்டை அப்படியே பார்த்துவிடுவோம்;

வஞ்சனேன் எனக்கு
நானே! மாதரார்
வடிவு கொண்ட
நஞ்சுதோய் அமுதம்
உண்பான் நச்சினேன்;
நாளும் தேய்ந்த;
நெஞ்சு நேரான
உம்மை நினைப்புவிட்(டு)
ஆவி நீக்க
அஞ்சினேன்; அடிய
னேன் உம் அடைக்கலம்,
அமுதின் வந்தீர்!

[நாளும் தேய்ந்த– நெஞ்சும் தேய்ந்து நாட்களும் தேய்ந்து போய்விட்டன.]

நெஞ்சிலே சிறை வைத்தவனுக்குத் தான் என்ன தண்டனை, என்ன ஹிம்சை! நெஞ்சம் தேய்ந்து வாளும் தேய்ந்து கொண்டிருப்பதாகக் கதறுகிறான்.

நினைப்பை விட்டு விட்டால் நெஞ்சு நேராகிவிடாதா! அதுதான் இல்லை. 'இப்போது கண்ணுக்கு! நேராக இருப்பது போல் எப்போதும் என் நெஞ்சுக்கு நேராக இருக்கிறீரே!' என்கிறான்.

கண்ணுக்கு நேராக இருப்பவரை நம் கண்களை மூடிக் கொண்டு பார்க்காமலிருந்து விடலாம். நெஞ்சுக்கு நேராக இருப்பவரை எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும், நினைக்காமல் இருக்க முடியும்!

இந்த நிலையில் 'நினைப்பைவிடு' என்றால் அதன் பொருள் 'ஆவியை விடு' என்பது தான். ராவணனே, 'நினைப்புவிட்டு ஆவி நீக்க அஞ்சினேன்' என்கிறான்.

அஞ்சாத சிங்க நெஞ்சு அஞ்சுகிறதாம். என்ன அதிசயம்! ஆனால் ஆவிநீக்க அஞ்சவில்லை; 'நினைப்புவிட்டு ஆவி நீக்க' த்தான் அஞ்சுகிறான். ஆவி நீங்கினால் சீதை-நினைப்பும் நீங்கிவிடுமே என்ற அச்சம்தான்.

'நஞ்சுதோய் அமுத' த்தைக் கடைசியாக அமுதம் என்றே மீண்டும் மயங்கிப் போகிறான்.

அமுதின் வந்தீர்!

என்றே அடைக்கலம் அடைகிறான்.

ராவணனுக்கு இப்படி அச்சம் கற்பித்தவர், அடிமைத் தேவர்களுக்கு அச்சம் தீர்த்தார் என்றும் சொல்லுகிறான். அச்சம் மட்டுமா இவனுக்கு அறிவித்தார். இன்னல் இன்னபடி இருக்கும் என்று தெரியாதிருந்தவனை இன்னல் அறிவித்தவரும் இவரே என்கிறான்.

தோல்வியின் இரகசியம்

இன்னும் என்னென்னவோ சொல்லி விடுகிறான் ஒரே மூச்சில், எல்லாவற்றுக்கும் மேலாக, தான் திடீரென்று கண்டு பிடித்துவிட்ட இரகசியம் ஒன்றையும் சீதையிடம் வெளியிடுகிறான்.

முதற்போரில் தோற்றுப் போனானல்லவா! ராமனுவது தோற்பிக்கவாவது: 'தோற்பித்தவர் நீரே!' என்கிறான்.

சீதை காதலால் ராமன் வெற்றி பெற்றானும். அந்தக் காதலை, சீதை தன்னிடம் காட்டாதது காரணமாகவே இவன் தோற்றுப் போய்விட்டானும்.

தோற்பித்தீர்!

என்று தொடங்குகிறான்.

சீதை செய்த விபரீதங்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போகிறான்:

தோற்பித்தீர்; மதிக்கு
மேனி சுடுவித்தீர்;
தென்றல் தூற்ற
வேர்ப்பித்தீர்; வயிரத்
தோளை மெலிவித்தீர்;
வேனில் வேளை
ஆர்ப்பித்தீர்; என்னை
இன்னல் அறிவித்தீர்;
அமரர் அச்சம்
தீர்ப்பித்தீர்; இன்னம்
என்என் செய்வித்துத்
தீர்தீர் அம்மா!

[மதிக்கு–சந்திரனுக்கு. தென்றல் தூற்ற–தென்றல் காற்று நீர்த் திவலை களைத் தூற்றிக் கொண்டு வீச. வேனில் வேள்–வேனில்காலத்தைத் துணையாகக் கொண்ட மன்மதன், ஆர்ப்பித்தீர்–ஆர்ப் பாடம் செய்யுமாறு செய்தீர். தீர்திர்–தீர்வீரோ.]

இந்தப் பாட்டிலே நடுநாயகம் போல் அமைந்திருக்கிறது 'என்னை இன்னல் அறிவித்தீர்' என்பது. 'ராவணேச்வரனுகிய என்னையும் இப்படிச் செய்துவிட்டீரே' என்று அலறுகிறது நெஞ்சு.

'இன்னம் என்னென் செய்வித்துத் தீர்திர் அம்மா!' என்று கதறும் இருதயம், இந்த இன்னற் சுழிகளிலிருந்து தப்பி நீந்திக் கரையேற வழி தெரியாமல் தத்தளிக் கிறது. 'உலகத்திலேயே ஒரு பெண்; அந்தப் பெண் நீர் ஒருவரே!' என்று இருக்கும்போது, எங்கே எப்படித் தப்பி யோடுவது!

உலகத்திலேயே ஒரு பெண்ணைப் பார்க் கும் இந்தக் காட்சி—விபரீதத்திலிருந்து எத்தனை விபரீதங்கள் முளைத்துக் கிளைத்து விடுகின்றன!

ராமனுக்கும் தோற்றுக் காமனுக்கும் தோற்றது விபரீத சிகரமாய்க் காண் கிறது:

பெண்ணெலாம் நீரே
யாக்கிப், பேரெலாம்
உமதே யாக்கிக்,
கண்ணெலாம் நுங்கண்
ஆக்கிக், காமவேள்
என்னும் நாமத்[து]
அண்ணல்எய் வானும்
ஆக்கி, ஐங்கணை
அரியத் தக்க
புண்ணெலாம் எனக்கே
ஆக்கி, விபரீதம்
புணர்த்து விட்டீர்!

[நுங்கண்–உம்மிடத்திலேயே, ஐங்கணை –பஞ்ச பாணங்கள். விபரீதம் புணர்த்து விட்டீர்–விபரீதங்களைச் செய்துவிட்டீர்.]

இத்தனை விபரீதங்களுக்கிடையே, 'செத்துச் செத்துப் பிழைக்கிறேன்!' என்கிறான்:

இறந்[து] இறந்[து] உய்கின்–
றேன் யான்; யார்இது
தெரியும் ஈட்டார்?

[உய்கின்றேன்–பிழைத்துக் கொள்கி றேன். தெரியும் ஈட்டார்–தெரிந்துகொள் ளும் தன்மையுடையவர்கள்.]

ராவணன் சொல்லும் அகலிகை கதை

கடைசியாக, அகலிகை கதையை ஓர் உதாரணமாகக் காட்டித் தன் பிரார்த் தனையை முடித்துக் கொள்கிறான்:

அந்தரம் உணரின்,
மேனுள் அகலிகை
என்பாள், காதல்
இந்திரன் உரத்தைப்
புல்கி எய்தினுள்
இழுக்குற்றுளோ?
மந்திரம் இல்லை,
வேறோர் மருந்தில்லை,
மையல் நோய்க்குச்
சுந்தரக் குமுதச்
செவ்வாய் அமுதலால்,
அமுதச் சொல்லீர்!

[அந்தரம் உணரின்–நடுவு நிலைமை யோடு ஆராய்ந்து பார்த்தால். மேனுள்–முன்னுள். காதல் இந்திரன் உரத்தைப் புல்கி–காதலோடு இந்திரனது மார்பைத் தழுவி. எய்தினுள் இழுக்குற்றுளோ–இன்பம் அடைந்தவள் தாழ்மை அடைந் தாளோ.]

பாலகாண்டத்திலே கம்பன் திருத்தி அமைத்திருக்கும் அகலிகை கதைக்கு மாறு பட்டிருக்கிறது இங்கே ராவணன் சொல் லும் அகலிகை கதை. 'இந்திரன் என்று தெரிந்ததும் குதூகலத்தோடு சம்மதித் தாள் அகலிகை' என்ற ஆதி காவியக் கதையைத் தழுவியது ராவணன் கூற்று.

புலி இருக்கும் வனத்திலே வந்து சேர்ந்து விட்டது ஒரு மான். 'அந்தப் புலியால் எந்த வேளை எத்தகைய ஆபத்து வந்து விடுமோ!" என்ற அச்சத்தோடு தான் இருக்கிறது. சஞ்சாரங்களும் மிகவும் குறைவானது.

மான் பயந்து கொண்டே யிருக்கும் போது, திடீரென்று புலியைப் பக்கத்திலேயே பார்த்து விடுகிறதாம். அப்போது இதன் நிலை எப்படி யிருக்கும்?

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

புலியா, துரும்பா?

இது சீதையின் நிலை, ராவணன் பிரார்த்தித்து விழுந்து வணங்கியபோது மான் பயந்தபடி, புலி வந்து கொன்று விடவில்லை!

புலி ஒரு பிரார்த்தனைதான் செய்து கொண்டது; மானுக்கு முன் வந்து வணங்கவும் செய்தது, தன் முடியையே காணிக்கையாகத் தருவது போல! ஆனால் பட்சிப்பதுதானே புலியின் காதல்!

சீதைக்கு உடல் முழுதும் நடுங்குகிறது. வாய் விட்டுப் புலம்பவும் பயந்து விம்மிக் கொண்டிருக்கிறாள். பிறகு எப்படியோ ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொள்கிறாள்.

இந்த நிலையில் 'அவன் என்னைக் கொல்லும்படி நேர்ந்து விட்டால் தான் என்ன!' என்றே தோன்றுகிறது. 'என் உள்ளத்தை அப்படியே அறிவித்து விடுவேன்' என்று துணிகிறாள்.

பக்கத்திலே ஒரு துரும்பு கிடக்கிறது. இதைப் பார்த்ததும் ஒரே தைரியம் வந்துவிடுகிறது. புலியையும் எதிர்க்கக் கூடிய தைரியம் மானுக்கு வந்து விடுகிறது!

எப்படி! 'உன் கிலியை நான் வென்று விட்டேன். நீ அற்பத் துரும்பு; அந்தத் துரும்பு மாதிரி!' என்று தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறாள்—தைரியம்.

வல்லியம் மருங்கு
  கண்ட மான் என
  மறுக்கம் உற்று,
மெல்லியல் ஆக்கை
  முற்றும் நடுங்கினள்,
  விம்மு கின்றாள்,
'கொல்லிய வரினும்
  உள்ளம் கூறுவன்
  தெரிய' என்னாப்,
புல்லிய கிடந்த
  தொன்றை நோக்கினள்,
  புகல்வ தானாள்.



[வல்லியம் – புலி. மருங்கு–பக்கத்தில். மறுக்கம் – கலக்கம். உற்று – அடைந்து. ஆக்கை முற்றும் – உடல் முழுதும். நடுங்கினள் விம்முகின்றாள்–நடுங்கிக் குழந்தை போல் விம்முகிறவளாய். கொல்லிய வரினும் – கொல்லும்படி வந்தாலும். கூறுவன் தெரிய – தெரியச் சொல்லுவேன். புல்லிய கிடந்தது ஒன்றை – தரையிலே கிடந்த அற்பமான ஒரு துரும்பை. நோக்கினள் புகல்வதானாள் – நோக்கிய வண்ணம் ராவணனிடம் சொல்லத் தொடங்கினாள்.]



சீதைக்கு வந்த தைரியம் தர்மாவேசமாகி வீராவேசமாகவும் பொங்கி விடுகிறது :

‘பழி இது பாவம்
என்று பார்க்கிலை;
பகரத் தக்க

மொழி இவை அல்ல
என்ப(து) உணர்கிலை
முறைமை நோக்காய் ;

கிழிகிலை நெஞ்சம்,
வஞ்சக் கிளையொடும்
இன்று காறும்

அழிகிலை’ என்ற
போ(து),என் கற்(பு)
என்னும்?
அறம்தான் என்னும் ?

[பழி இது பாவம் என்று – இது பழி, இது பாவம் என்று பகுத்தறிந்து. பார்க்கிலை – பார்க்கின்றாயில்லை. பகரத் தக்க – சொல்லத் தக்க. உணர்கிலை – உணர்கின்றாயில்லை. முறைமை நோக்காய்– எவரிடம் எப்படி நடக்க வேணும் என்ற முறைமையையும் நீ நோக்குகின்றாயில்லை. கிழிகிலை நெஞ்சம் – உன்னுடைய முறைமை தவறிய நெஞ்சு கிழித்து போயிருக்க வேண்டுமே, அப்படி நிகழவும் இல்லையே. வஞ்சக் கிளையொடும் – உன்னுடைய வஞ்சனைக்கு இசைந்தவராய்த் தாமும் வஞ்சகராக இருக்கும் உன் கிளைஞரோடும். இன்று காறும் – இன்று வரையிலும். அழிகிலை – அழிந்து போகவும் இல்லையே. என்னும் – என்ன பயனை உடையதாகும்.]

ராமபாணம் போலவே புறப்படுகிறது சீதையின் வார்த்தை. உண்மையில், இந்தச் சொல்லம்பே நெஞ்சைக் கிழித்து வச்சநாசம் செய்து விடுகிறது என்று சொல்லலாம். இதன் ஸ்தூல உருவமாகத்தான் ராமபாணம் வந்து ராவணவதம் செய்யப் போகிறது.

'முறைகேடான, தகாத வார்த்தைகளைச் சொல்வதற்கு உனக்குப் பெரிய வாய்கள் பத்து இருக்கின்றன!' என்கிறாள். 'கேட்பதற்குக் கதியற்ற நான் இருக்கிறேன்: நீ எதைத்தான் சொல்ல மாட்டாய்!' என்கிறாள்.

முதல் முதல் வந்த சீற்றத்தை ஒட்டிப் பிறக்கும் இந்த வார்த்தையும், ராமன் கையில் புல்லும் பாணத்தின் வேகத்தைப் பெறுவது போல் ஆற்றல் பெற்று விடுகின்றன :

தான்உள பத்துப்
பேழ்வாய் தகாதன
உரைக்கத் தக்க;
யான்• ஊன் கேட்க
என்றால் என்சொல்லாய்?
யாது செய்யாய்?

[தான்உள பத்துப் பேழ்வாய் – பிளவு பட்ட பத்து வாய்கள் உனக்கு இருக்கின்றன. தகாதன உரைக்கத் தக்க – தகாத வார்த்தைகளைச் சொல்வதற்கு ஏற்ப.]

தேவேந்திரன் முதலியவர்களை யெல்லாம் வென்றதாகப் பெருமை பாராட்டுகிறவன் ராவணன், போர்க்களத்தில் ராமனையும் சந்தித்ததாகப் பெருமை பாராட்டிக் கொண்டவன்தான்.

'ராமன் என்னைத் தோற்கடிக்கவில்லை; நீரே என்னைத் தோற்பித்தவர்!' என்று சீதையை நோக்கிச் சொன்னானல்லவா!

அதற்குப் பதில் சொல்லுகிறாள் சீதை இப்போது. 'உன் தோல்வி இருக்கட்டும்: போர்க்களம் புகுந்தபோது நீ ராமனைக் கண்ணால்தான் கண்டதுண்டா! காணவில்லை போலும்!' என்கிறாள்.

இது எப்படி! சண்டை போட்டுத் தானே தோல்வியுற்று வந்திருக்க முடியும். எனவே கண்ணால் காணாமல் இருந்திருக்க முடியுமா!

அச்சமயத்திலும் ராவணன் ராமனைக் காணாமலும் பாராமல் இருந்திருக்கக் கூடும் என்பதற்குக் காரணம் ஒன்றையும் கவனித்துப் பார்க்கிறாள்.

ராமனைக் கண்ணால் பார்த்திருந்தால் இந்தக் கோர ஸ்வரூபம் இப்படி வெட்கமின்றி வந்து ஆசை வார்த்தை பேசுமா!

சீதையின் உட்கருத்தைத் தெரிந்து கொள்ளச் சீதையின் வார்த்தையைக் கவிதை வாயிலாகக் கேட்க வேண்டும்:

பூசலின் எதிர்ந்தேன்
என்றாய்; போர்க்களம்
புக்க போ(து), என்
ஆசையின் கனியைக்
கண்ணில் கண்டிலை
போலும், அஞ்சி!

[பூசலின் – பெரும் போரில். எதிர்ந்தேன – எதிர்த்தேன். புக்கபோது – புகுந்திருந்தபோது. கண்டிலைபோலும் – காணவில்லை போலும்!]

முதற் போரில் தன்னைத் தோற்பித்தது சீதைதான் என்று சாமர்த்தியமாகப் பேசிய ராவணன், தன்னுடைய தோல்வியை அவள் ஏற்கெனவே அறிந்திருக்கக் கூடும் என்றே கருதினான். உண்மையும் அது.

ஊரெல்லாம், உலக மெல்லாம் ஓசைப் படுவது சீதை சிறை யிருந்த சோலையை எட்டாமலா இருக்கும்!

'நீ முதற் போரில் தோற்றுப் போனாயே' என்று அவள் சொல்லிக் காட்டுவதற்கு முன்பு தானே அதை ஒப்புக் கொள்வது சரி யென்று நினைத்தான். ஒப்புக் கொண்டு, அந்தத் தோல்வியையும் தனக்குள்ள காதலுடன் தொடர்பு படுத்தி, அதை அவளுக்கே ஒரு புகழ் மாலையாகவும் வெற்றி மாலையாகவும் அணிந்து காரிய சித்தி பெற வேண்டும் என்று தீர்மானித்தான்.

பத்து மூளைகளும் செய்த சூழ்ச்சி அது–பிரமாதமான சூழ்ச்சி, அந்தக் காதல்–சூழ்ச்சியை, மணக் கோட்டையைத் தகர்த்துத் தவிடு பொடியாக்குகிறது சீதையின் வார்த்தை.

ராவணன் தோற்றதாக ஒப்புக் கொண்ட போது, ராமனோடு முக முகமாக எதிர்த்து நின்ற ஒரு பெருமையாவது இருந்தது. சீதையோ, ராவணன் அந்தப் போர்க் களத்தில் புகுந்ததை மட்டும் ஒப்புக் கொள்கிறாள். 'அவன் உன்னை எதிர்த்து வந்த போதும் நீ அவனைப் பார்த்திருக்க மாட்டாய்; கண்களை மூடிக் கொண்டிருப்பாய்!' என்கிறாள்.

ஏன் அப்படி? 'கண்ணில் கண்டிலை போலும்' என்றவள், 'கண்டிலை போலும் அஞ்சி!' என்று வாக்கியத்தை முடிக்கிறாள். சாதாரண அச்சமா இது!

"ஆஸ்ட்ரிச்சு" என்ற நெருப்புக் கோழியை வேடன் ஒருவன் எதிர்ப்பட்டான், ஒரு மணற் காட்டிலே. உடனே அது தன் கண்ணையும் மூக்கையும் மணற் புகர் ஒன்றில் மறைத்துக் கொண்டதாம்.

தன் கண் பார்வை மறைந்து இருட்டாகத் தெரிந்ததும், அந்த இருட்டிலே வேடனுக்கும் கண் பார்வை தெரியாது என்று நம்பி விட்டதாம் அந்தப் பேதைப் பிராணி.

அத்தகைய அச்சம் ராவணனுக்கும் ஏற்பட்டிருக்கக் கூடும் என்கிருள். அந்த அச்சத்திலே 'என் ஆசையின் கனியை நீ எப்படிப் பார்த்திருக்க முடியும்!' என்கிருள்.

ஆசையின் கனி

சீதை ராமனே 'என் ஆசையின் கனி' என்று குறிப்பிடுவதும், ராவணனிடம் அப்படிக் கூறுவதும் கருத்தூன்றிக் கவனிக்கத் தக்கன. சீதையைப் 'பெண்கனி' என்பது பாலகாண்டத்திலே கவிக்கூற்று.

பெண்மையாகிய கற்பக விருட்சத்திலே அபூர்வமாகக் கொம்பிலே கனிந்த கனியென்பது கருத்து. இந்தப் பெண்கனி தன் விளையாட்டுப் பருவம் தொடங்கி மேற்கொண்டிருந்த ஆசையெல்லாம் ஓர் உருவமாகி வந்தது போல் வந்து வாய்த்திருக்கிறுனும் ராமன்.

'என் ஆசையின் கனி' என்ற இந்தச் சொற்றொடர், சீதையின் உள்ளத்திலே ராமன் விஷயமாகக் கொந்தளிக்கும் ஆசை-உணர்ச்சிகளை யெல்லாம் நம் மனக்கண்முன் ஒரு கடல் போலக் காட்டுகிறது எனலாம்.

'போர்க்களம் புக்கபோது, என் ஆசையின் கனியைக் கண்ணில் கண்டிலே போலும், அஞ்சி!' என்பது கவிதையுலகின் மகா வாக்கியங்களில் ஒன்ருக மதிக்கத் தக்கது.

'ஆசையின் கனி'யின் ஆசையால் தான் இன்னும் உயிரை வைத்துக்கொண்டிருக்கிருள். 'பிரிந்ததும் இறந்தாள்' என்பதல்லவா இந்தக் கற்புக் கனலுக்கு உயர்ந்த புகழ்! அந்த உயர் புகழ் சூடாது உயிரை வைத்திருப்பதற்கு வேறு காரணம் இருக்க முடியுமா?

'ஆசையின் கனி'யைக் குறிப்பிடும்போதே அந்தத் திவ்ய மங்கள சௌந்தரியம் அகத்தும் புறத்தும் தோன்றுகிறது. அது ரூப சௌந்தரியம்தானு?

'பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணியமூர்த்தி' என்றல்லவா குறிப்பிடுகிருள்? ஆபரணங்களை யெல்லாம் தாங்கிய திருமேனியுள்ள புண்ணிய மூர்த்தியாம்.

என்ன அதிசயம்! ஆபரணங்களை யெல்லாம் துறந்து மரவுரி கட்டித் துறவியின் கோலத்தில் இருப்பவனைச் சீதை, 'பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி.'

[பொறுத்த — தாங்கிய.]

என்று குறிப்பிடுகிருள்.

பொறுங்கள்; பொறுத்து முழுதும் கேளுங்கள். 'குணங்கள் என்னும் பூண்' என்று தான் சொல்லுகிருள்.

எந்த ஆபரணத்தைத் துறந்தாலும், ராமன் தன் குணத்தைத் துறக்க முடியுமா? கைகேயி தான், குணங்கள் என்ற ஆபரணங்களை அபகரித்துக் கொள்ள முடியுமா?

ராமனுடைய குணங்களைச் சீதை 'நவை அறு குணங்கள்' — அதாவது குற்றமற்ற குணங்கள், கல்யாண குணங்கள் — என்கிருள்.

கல்யாண குணங்கள் என்கிற திவ்ய மங்கள அணிகலன்களை யெல்லாம் தாங்கிய புண்ணியத் திருமேனி சீதை உள்ளத்திலிருந்து அப்படியே வாக்கில் குதித்து வெளிப் படுவது போலக் காண்கிறது.

இந்த மேனியைக் காணலாம் என்ற காதல் தான் என் உயிரை இந்தக் கணம் வரை வைத்திருக்கிறது என்கிருள்;

ஊண் இலா யாக்கை
பேணி, உயர்புகழ்
சூடா(து), உன்முன்
நாண் இலா(து) இருந்தேன்
அல்லேன்; நவை அறு
குணங்கள் என்னும்
பூண்எலாம் பொறுத்த
மேனிப் புண்ணிய
மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும்
என்னும் காதலால்
இருந்தேன் கண்டாய்!

[ஊண் இலா யாக்கை — போதுமான உணவு இல்லாமல் கிடக்கிற இந்த உடம்பை. நாண் — நாணம். நவை அறு — குற்றமற்ற. பூண் — ஆபரணம்.]

ராமனது திருமேனியைக் காண ஆசைப்படுகிறவள், ராமன் அரக்கர் கூட்டத்தை முழுதும் வென்று நிற்கும் அந்த விஜய சௌந்தரியத்தையும் இந்தத் திருமேனியிலே காண ஆசைப்படுகிருள்.

வது என்றுதான் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று குழறினான்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம்! இன்று பெண் பார்க்க சௌகரியமில்லை. ஆகவே இன்று வரவேண்டாம், நாளைக்கு வரலாம் என்று சொல்லி விட்டு வரும்படி தான் அப்பா என்னை அனுப்பினார். நீங்கள் கவலை யில்லாமல் நிதானமாக அந்த மாமாவை வெளியே கொண்டு வர முயற்சி செய்யுங்கள்" என்றான் அம்பி.

வரதனுக்குப் பெரிய பாரம் நீங்கின மாதிரி இருந்தது.

"எதிரே யிருக்கும் படக்கடையிலிருந்து யாராவது ஒரு ஆளைக் கூப்பிட்டு நாதாங்கியைப் பிடுங்கச் சொல்ல வேண்டியதுதான்" என்றார் மாதவன்.

"அதற்கு முன்னால் ஒருவர் ஹோட்டலுக்குச் சென்று சாப்பாடு கொண்டு வந்து விடுங்கள்" என்று கத்தினான் சுந்தரம்.

"சரி" என்று மாதவன் வெளியே சென்றார். அம்பியும் வரதனும் மாடிக்குச் சென்றனர்.

"இந்தப் பூட்டு வேறு சாவிக்குத் திறக்காதா, ஸார்?" என்றான் அம்பி.

"ஹூம் ஹூம்! அதன் சாவி ஒன்றால் தான் முடியும்" என்றான் வரதன்.

கதவின் அருகே சென்று பூட்டை இப்படியும் அப்படியும் உலுக்கிய அம்பி, 'ஸார்' என்று துள்ளினான்.

"என்ன!" என்றான் வரதன் பதைபதைப்போடு.

"பூட்டு பூட்டவே இல்லை, ஸார். திறந்தே இருக்கிறது" என்று கூச்சலிட்டபடியே பூட்டை எடுத்து விட்டு கதவைத் திறந்தான் அம்பி.

சிறையிலிருந்து விடுதலை பெற்றவன் போல் சுந்தரம் 'அப்பாடா' என்று ஹாலில் வந்து விழுந்தான்.

வரதன் திருதிரு வென்று விழித்தான். அவன் முகத்தில் வெள்ளமாக அசடு வழிந்தது.

"அம்பி! உன் அத்திம்பேரின் சாமர்த்தியத்தைப் பார்த்துக் கொண்டாயா? உங்க அக்காவைப் பார்க்க வருகிற ஜோரில், நான் உள்ளே இருப்பதையும் பார்க்காமலே கதவைச் சாத்திப் பூட்டினதாக நினைத்துக் கொண்டு, சாவியையும் தொலைத்து விட்டு, திறந்த கதவின் முன்பே கூத்தடித்திருக்கிறார். உங்கள் வீட்டிற்குப் போய் எல்லோரிடமும் சொல்" என்றான் சுந்தரம். அவன் முகத்தில் அப்போதுதான் சிரிப்பு வந்தது.

"சொல்லாமலா! அவசியம் சொல்லப் போகிறேன்" என்றான் அம்பி.

சிறிது நேரம் கழித்து, "ஏன் ஸார், இன்று பெண் பார்க்க சௌகரியமில்லை என்றதற்குக் காரணம் என்னவென்று கேட்கவில்லையே?" என்று கேட்டான் அம்பி.

"என்ன காரணம், சொல்லேன்" என்றான் சுந்தரம்.

"நான் வரும்போது அப்பா காரணம் சொல்ல வேண்டாமென்றுதான் சொல்லி அனுப்பினார். ஆனால் இப்போது சொல்லாவிட்டால் என் தலை வெடித்துவிடும்போலிருக்கிறது" என்றான் அம்பி.

"என்ன அப்படிப்பட்ட முக்கிய விஷயம்?" என்று வரதனும் ஆவலோடு கேட்டான்.

"என் அக்காவும் இன்று 'டிரஸ்' பிரமாதமாக அமைய வேண்டுமென்று புடவை, ரவிக்கை எல்லாம் பொறுக்கி வைத்து, போட்டிருக்கும் நகை அவ்வளவையும் கழட்டி பாலிஷ் செய்து பெட்டியில் வைத்து விட்டு, முகத்தை அலம்பிக் கொள்ளப்போகும் அவசரத்தில், சாவியையும் பெட்டி உள்ளேயே போட்டு விட்டு பூட்டை அழுத்திப் பூட்டி விட்டாள். வெறும் மூக்குத்தி கூட இல்லாமல் எப்படிப் பெண் பார்க்க முடியும் என்று நாளை ஒத்திப் போட்டு விட்டார்கள். நாளைக்குப் பூட்டுக் கடை திறந்ததும் அதே சாவியைக் கண்டு பிடித்து விடலாம் என்று நினைத்தோம். காரணத்தைச் சொன்னால் அவ்வளவாக நன்றா யிருக்காதே என்று கௌரவம் பார்த்தால் இங்கு அதை விட மோசமாக இருக்கிறது!" என்று சிரித்தான் அம்பி.

சுந்தரம் விழுந்து விழுந்து சிரித்தான். "அம்பி! உன் அக்காவுக்கும் இவருக்கும் பொருத்தம் பிரமாதம். பெண் பார்ப்பது கூட அவசியமில்லை. உடனே கல்யாணம் நிச்சயம் செய்யச் சொல்" என்றான்.

"சரி, மாமா!" என்று கிளம்பினான் அம்பி.

தாழ்ப்பாளை உடைக்க ஆள் பின் தொடர சாப்பாட்டோடு மாதவன் மேலே வந்து கொண்டிருந்தார்.

சீதைக்கு உயிர் ராமன், ராமனுக்கோ கருணை உயிராக இருக்கிறதாம். சீதைக்கு ராமன் தவிர வேறு உயிர் இல்லை; ராமனுக்குக் கருணை தவிர வேறு உயிர் இல்லை. இப்படிச் சீதை கூறுகிருள் ராவணனை நோக்கி.

இதில் ஏதாவது உட்பொருள் இருக்க முடியுமா ! ராவணன் தன் காமப்பித்தை ஒழிக்க வேண்டும்; இல்லா விட்டால் தானே ஒழிந்து போவான். இதுதான் சீதை உரையின் வெளிப்படை நோக்கம்.

தனக்கு உயிர் ராமனே என்று சீதை கூறுவதனுல் ராமன் இருக்குமளவும் சீதையும் இருப்பாள் என்பதும் பெறப் படும். இந்த நம்பிக்கை தானே சீதை யின் உயிரை இதுவரை காப்பாற்றி வந்திருக்கிறது.

சீதைக்கு உயிரான ராமனுக்கு உயிர் கருணை யென்றுல், சீதையும் கருணையும் ஒன்றே என்றும் தர்க்கரீதியாக ஊகஞ் செய்யலாமல்லவா ! 'ராவணனும் தன்னு டைய ராட்சஸக் கொடுமைகளை மாற் றிக் கொண்டால், ஐயோ ! பிழைத்துப் போகட்டும் என்பது சீதா பிராட்டியின் கருணை என்று கருதுவதும் மிகையாகாது.

ஆசையும் 'ஆசையின் கனி' யும்

ஆனுல் சீதை ராமனைத் தனக்கு உயிர் என்று பேசுவது ராவணன் கொடுமையை மாற்றுவதற்கு மாருக அவனுடைய கோபத்தைத் தான் மூட்டுகிறது.

ராமனைப் புண்ணிய மூர்த்தி யென்று சொன்னதுடன், அவனுடைய கண்ணைத் 'தாமரைக் கண்' என்று ஆசை தோன் றக் குறிப்பிட்டால், ராவணனுடைய இருபது கண்களிலும் பொருமைத் தீ ஜொலிக்காமல் இருக்க முடியுமா !

நீல மேகம் வான வில்லோடு காட்சி யளிப்பது போல் வில்லுங் கையுமாக ராமன் தன் உள்ளத்தில் தோன்றும் அதி சயத்தை அப்படியே ஒரு வசீகர சித்திர மாகவும் ராவணன் கண்ணுக்கு முன் சீதையின் வார்த்தை தோற்றுவிக்கிற தென்றுல், ராவண கோபத்திற்குக் கங்கு கரை ஏது !

இனி, சீதையின் இத்தகைய வார்த்தை யைக் கவிதை வாயிலாகவே கேட்டுப் பார்ப்போம் :

எனக்(கு) உயிர் பிறிதும்
ஒன்(று) உன்(டு) என்(று)
இரேல்;
இரக்கம் அல்லால்
தனக்(கு) உயிர் வே(று) இன்
ருகித், தாமரைக்
கண்ண தாகிக்

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ


கனக்கரு மேகம்
ஒன்று கார்முகம்
தாங்கி, யார்க்கும்
மனக்(கு) இனிதாகி
நிற்கும், அஃதன்றி,
வரம்பி லாதாய் !

[பிறிதும் ஒன்று — வேறும் ஒன்று. இரேல் — இராதே; வேறு இன்றுகி — வேறொன்று இல்லாததாகி. தாமரைக் கண்ணதாகி — தாமரை போன்ற கண் களை உடையதாகி. கனக் கரு மேகம் — நெருங்கிய கரு நிறமுள்ள மேகம். மனக்கு இனிதாகி — மனத்திற்கு இனிமை தருவ தாகி. நிற்கும் அஃது அன்றி — நிற்கின்ற அந்த ராமன் எனப்படுகிற பொருளே அன்றி. வரம்பு இலாதாய் — நீதி வரம் பிற்குக் கட்டுப் படாதவனே.]

அகலிகை கதை சொல்லி 'உன்னு டைய அமுதச் சொல்லால் விடையருள வேணும்' என்று, சீதையை நோக்கி நிலத்தில் விழுந்து வணங்கிய ராவணனி டம் சீதை தன் 'ஆசையின் கனி' யை ஆசை தீர வருணிப்ப தென்றுல், அது ராவணனுடைய பொருமையையும் கோபத்தையும் ஒருங்கே தூண்டி விட்ட தில் அதிசய மில்லை.

விளக்குகளின் வெளிச்சத்திலே தகதக வென்று ஜொலிக்கும் கிரீடங்களுடன் வந்தான். அந்தக் கிரீடங்களைப் பாத காணிக்கையாக வைப்பது போல் விழுந்து வணங்கினுன்.

இழந்து அடி விழுந்தும், சீதை 'என் உயிருக்குத் தாமரைக் கண் உண்டு; அது நீல மேகம்; வான வில்லோடு கூடிய வசீகர மேகம்!' என்று சொல்லி விட்டால்



அப்போது அந்த இரத்தினக் கிரீடங்களில் சூரிய ஒளியும் மின்னல்களும், நட்சத்திரங்களின் கண் சிமிட்டுகளும் ஒரு ஜால வித்தை காட்டுவது போல் ராவண ஐசுவரியத்தையும் படாடோபத்தையும் சீதைக்குக் காட்டி உள்ளத்தைப் பகட்டவும் முயன்றன.

எனினும் சீதை சற்றும் மயங்காது அந்த மரவுரி கட்டிய நீலமேனியையும் தாமரைக் கண்களையுமே பிரமாதப் படுத்திக் கொண்டிருந்தால், ராவணனுக்கு எப்படிக் கோபம் பொங்காமலிருக்க முடியும்?

'நீ இரங்கி வரம் அருள்வதானால் தான் நான் எழுந்திருப்பேன்!' என்ற குறிப்புடன் காலில் விழுந்த காமுகன் சீதை தன் மீது சிறிதும் இரக்கம் கொள்ள வில்லையென்று கோபிக்கிறான். உண்மையில், சீதையின் பெருங் கோபம் கூட ராவணன் திருந்திப் பிழைத்துப் போவதற்கும் கருணை – வழியைச் சுட்டிக் காட்டத் தான் செய்கிறது!

சுந்தர காண்டத்திலும் சீதையைத் தரையில் விழுந்து வணங்கியதாக வருகிறது. ஆனால் அங்கே அந்த வணக்கத்தில் காணப்பட்ட செருக்கும் தன்னம்பிக்கையும் கூட, இந்தச் சந்திப்பிலுள்ள வணக்கத்தில் கொஞ்சமும் காணப்படவில்லை. இவ்வளவு தூரம் தன்மதிப்பும் ரோஷம் அக்கினிப் பிரளயமாகப் பொங்கி விட்டதில் அதிசயமில்லையே.

பறித்துண்ணும் கனிதானா?

இந்த நிலையில் கோபத்திற்கிடையே எரிமலையிலிருந்து பொங்கி விழும் நெருப் பருவி போல் வருகிறது ஒரு சிரிப்பு.

என்றனள் ; என்ன —
 லோடும், எரியுறு
 கண்ணன், தன்னைக்
கொன்றன மானம்
 தோன்றக் கூற்(று) எனச்
 சீற்றம் கொண்டான்,
'வென்(று) எனை இராமன்
 உன்னை மீட்டபின்,
 அவனொ(டு) ஆவி
ஒன்(று) என வாழ்தி
 போல்!' என்(று) இடி உரும்
 ஒக்க நக்கான்.

[என்றனள்—என்று சீதை கூறி முடித்தாள். எரி உறு கண்ணன்—நெருப்பைக் கக்கும் கண்ணை உடையவன். கொன்றன மானம்—கொல்வது போன்ற ரோஷம். கூற்று என — யமன் போல. வாழ்தி போல்—வாழ்வாய் போலும். இடி உரும் ஒக்க—பேரிடி போல. நக்கான் — சிரித்தான்.]

ராவணன் சிரிப்பு ஒரு பரிகாசச் சிரிப்பே யாகும். ஆனால் கோப மலையிலிருந்து கொட்டுகிறது இந்த அருவி. 'தாமரையாவது, கண்ணாவது; மேகமாவது, வான வில்லாவது! ஆசையாவது, ஆசையின் கனியாவது — எல்லாம் என் சீற்றத் தீயில் வெந்து சாம்பலாகி விடும்!' என்பது இந்தச் சிரிப்பின் பொருள்.

இந்தச் சிரிப்புடன் புறப்படும் வார்த்தைப் பிரவாகத்தையும் பார்க்கலாம்:

இனத்துளார், உலகத்(து)
 உள்ளார், இமையவர்
 முதலினோர் என்
சினத்துளார் யாவர்
 தீர்ந்தார்? தயரதன்
 சிறுவன் தன்னைப்
புனத்துழாய் மாலை —
 யான் என்(று) உவக்கின்ற
 ஒருவன் புக்(கு), உன்
மனத்துளான் எனினும்
 கொல்வன்; வாழுதி
 பின்னை மன்னோ!

[இனத்துளார்—தன் இனத்தில் உள்ளவர்கள். இமையவர்—தேவர்கள். தீர்ந்தார்—(இங்கே) தப்பிப் பிழைத்தார்கள். புனத்துழாய் மாலையான் — கொல்லையில் தோன்றுகிற துளசி மாலை அணிந்த திருமால். உவக்கின்ற — நீ உவப்பதற்குக் காரணமான. புக்கு—புகுந்து. வாழுதி பின்னை—பிறகு நீ வாழ்ந்து போவாய்.]

இவ்வுலகத்தில் உள்ளவர்களை இனத்துளார் என்றும், பிற வகுப்பினரென்றும் இரு பெரும் பிரிவில் அடக்குகிறான் ராவணன். இந்த வகுப்பினரோ, தேவ வகுப்பினரோ, தன் சீற்றத்திற்கு இலக்காகிப் பின் உயிரோடு இருக்க முடியாது என்கிறான். அப்படியிருக்க, இந்த ராமனா தன்னை எதிர்த்தும் உயிர் தப்பப் போகிறான் என்று சொல்லத் தொடங்கியவன் எப்படிப் பேசி முடிக்கிறான், பாருங்கள்!

ராவணன் எவ்வளவு அலட்சியமாக ராமனைக் கருதுகிறானென்று சீதை தெரிந்து கொள்ள வேண்டுமாம். எனவே 'தயரதன் சிறுவன்' என்கிறான். சீதை அவனைத் தெய்வம் போல் மதித்துத் தன்னை ஏமாற்றிக் கொள்ளலாம், ஆனால் பிரதாப லங்கேச்வரனுக்கு ராமன் சிறுவன் தான்; சிற்றுண்டிதானும்.

'அவன் உன் மனத்துள்ளே புகுந்து கொண்டாலும் நான் கொன்று தீர்த்து விடுவேன்' என்ற வாக்கிலே ராவணனுடைய பொறுமையுள்ளம் நெய் பொழிந்த நெருப்புக் குண்டம் போல் ஜொலிப்பதைக் காண்கிறோம்.

'நீ சொல்வதை யெல்லாம் நான் பொறுத்துக் கொள்ளலாம், ஆனால் அந்த ராமன் மட்டும் உன் உள்ளத்தில் இடம் பெற்றிருக்கக் கூடாது. அப்படியே அவனை அங்கேயிருந்து பறித்தெடுத்து விடுவேன்!' என்று பேசுகிறது தீ நாக்கு.

'அப்படி நான் உன் ஆசையின் கனியைப் பறித்து என் கோபப் பசிக்கு இரையாக்கிய பின் நீ வாழ்ந்து போவாய், அம்மா! வாழ்ந்தே போவாய்!' என்று இடிக்கிறது குரல் கோடையிடி போல.

சீதைக்கு ஏதோ ஒரு வகை அசட்டுத் தைரியம் வந்து விட்டது என்கிறான். அதற்குக் காரணங்களும் இல்லாமல் இல்லை என்கிறான்.

குரங்குகள் கடலில் அணை கட்டி இலங்கை மதிலை வளைத்துக் கொண்டன என்பது தானே தைரியத்திற்குக் காரணம்! ஆனால் இப்படிக் குரங்குகள் படையெடுத்து வந்திருப்பது வந்தவர்களுக்குத்தான் கவலை தர வேண்டுமாம், ஏன்?

விளக்கும் விட்டிலும்

விளக்கின் மீது விட்டிற் பூச்சிகள் படையெடுத்து வந்தால் விளக்கிற்கா நஷ்டம்! விட்டிற் பூச்சியைக் கொல்ல

விளக்கான து பூச்சிகள் இருக்கும் இடம் தான் போக வேண்டுமா!

'வரட்டும்; வந்து விழட்டும்; ஒரே அடியாகப் பொசுக்கி விடுவோம்' என்று தானே சும்மா இருக்கிறது விளக்கு. இது தான் இலங்கையின் ராட்சஸ குலப் பெருஞ் சோதியாகிய தன் நிலையும் என்கிறான்.

இதோ ராவணன் பேசுவதை அப்படியே கேட்டு விடுவோம்:

'வளைத்தன மதிலை;
வேலை வருத்தன
வரம்பு; வாயால்

உளைத்தன குரங்கு'
பல்கால் என்(று) அகம்
உவந்த(து) உண்டேல்,

இளைத்த நுண் மருங்குல்
நங்காய்! என் எதிர்
எய்திற்(று) எல்லாம்

விளக்(கு) எதிர் வீழ்ந்த
விட்டில் -பான்மைய,
வியக்க வேண்டா.

[வேலை வருத்தன வரம்பு—சமுத்திரத்தில் அணை கட்டின. வாயால் உளைத்தன குரங்கு பல்கால்—குரங்குகள் வாயால் பல தடவை சத்தம் போட்டன. அகம் உவந்தது உண்டேல்—உன் மனம் உவந்திருக்குமானால். இளைத்த நுண் மருங்குல் நங்காய்—சிறுத்து நுண்ணிய இடையையுடைய நங்கையே, விட்டில் பான்மைய—விட்டிற் பூச்சிகளின் தன்மையை உடையனவேயாம். வியக்க வேண்டா—நீ அது குறித்து ஆச்சரியப்பட வேண்டியதில்லை.]

இப்படிச் சொல்லி விட்டு, அதே மூச்சில் ஒரு பெரிய படையெடுப்பு அயோத்தியை நோக்கியும் மிதிலையை நோக்கியும் நிகழ்ந்திருப்பதாகச் சீதைக்குத் தெரிவிக்கிறான்.

முதல் முதல் அயோத்தி மீது படை வீரர் போயிருப்பதைத் தெரிவித்துப் பிறகு 'உன் தந்தை மீதும் போர் வீரர்களைச் செலுத்தியிருக்கிறேன்' என்கிறான்.

முன்னுக்குப் பின் முரண்பட, விளக்கே விட்டிற் பூச்சிகள் மீது படையெடுத்து விட்டது என்று சொல்லும் செய்தி இது:

'கொற்றவாள் அரக்கர்
தம்மை "அயோத்தியர்
குலத்தை முற்றும்

பற்றி நீர் தருதிர்;
அன்றேல் பசுந்தலை
கொணர்திர்; பாரித்து

உற்ற(து) ஒன்(று) இயற்று—
விர்" என்(று) உந்தினேன்;
உந்தை மேலும்

வெற்றியர் தம்மைச்
செல்லச் சொல்லினன்
விரைவின்' என்றான்.

[கொற்றவாள் அரக்கர் தம்மை—வெற்றி பொருந்திய வாட்படையுள்ள அரக்கர்களை. அயோத்தியர் குலத்தை முற்றும்—அயோத்தி அரசர் குலத்தை முழுவதும். பற்றி நீர் தருதிர்—நீங்கள் பிடித்துக் கொண்டு வாருங்கள். பசுந்தலை கொணர்திர்—அந்த அயோத்தியர்களின் தலைகளை அப்படியே வெட்டிக் கொண்டு வந்து சேருங்கள், பாரித்து—முயற்சி செய்து. உற்றது ஒன்று—இந்த இரண்டில் ஏற்றதொரு செயலை. உந்தினேன்—செலுத்தியுள்ளேன். உந்தை மேலும்—உன்னுடைய தந்தை மேலும். வெற்றியர் தம்மை—எத்தனையோ போர்களில் வெற்றி அடைந்திருக்கும் வீரர்களை.]

இப்படி ராவணன் முரண்படப் பேசியும் சீதை எப்படி நம்பிவிடுகிறாள்!

துயரம் நிறைந்த உள்ளம் தெளிவாக இந்தப் பிரசினைகளை அலசிப் பார்க்க முடியுமா! அதற்கு உரிய அனுபவம் தான் சீதைக்கு உண்டா! எதிரே நிற்கும் ராவண பயம்தான் தெளிவாகச் சிந்திப்பதற்கு இடம் கொடுக்குமா!

போரின் நிலைமை சீதைக்கு நன்றாகத் தெரியாது. ராமனுடைய வீரத்தில் நம்பிக்கை உள்ளவளாயினும், அரக்கன் சொன்னபடி ஒரு படையெடுப்பு ராமனுக்குத் தெரியாமலே நடக்கவும் கூடும் என்று எண்ணி விடுகிறாள்.

ராம லட்சுமணரை ஏமாற்றி அவர்களுடைய பாதுகாப்பிலிருந்த தன்னை வஞ்சித்துச் சிறைப் படுத்திய அரக்கர் கோன் இப்போதும் அவர்களை ஏமாற்றி அயோத்தி மீதும் மிதிலை மீதும் படை வீரர்களை ஏன் அனுப்பி யிருக்க முடியாது!

இந்த நிலையில், தனக்கு அருமையானது ஒன்றுமே இல்லை என்று ராவணன் அவளை மருட்டுவதற்குக் கூறியதை அப்படியே ஒப்புக் கொண்டு பெருந்துயரம் அடைகிறாள்.

ஆனால் இப்படிச் சீதையை மருட்டி வைப்பது மட்டும் ராவணன் நோக்கம் அன்று, வேறொரு நோக்கமும் உண்டு, விளக்கு விட்டில் மீது படையெடுத்ததைக் கற்பிப்பதற்கு.